# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

### அருட்சகோதரிகள்

*மேரி செசரியா, ரூபெல்லா மேரி, ஜெரின் மேரி, லில்லி புஷ்பம், மேரி மௌரிஸ், புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - தோகமலை, - வித்யா மேரி, ஸ்டெல்லா ரோஸ்- திண்டுக்கல், மிரியம், ரஞ்சிதம், பிரேமா, லில்லி இசபெல்லா மேரி, ஜோஸ்பிட்டா மேரி, சேசு ராஜம், ஜூலி எலிசெபெத், ஜெய சேகரி, மேரி மார்கிரேட், மரிய வெண்ணிலா, மரிய ரூபி குயீன்*

### பொதுநிலையினர்

*பிரான்சிஸ் பேசில், அனிருத் ஜோஸ்வா, ஜேடன், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, செலின் மேரி, கிளாரா லூர்துமேரி, மேரி - இளையரசனேந்தல், இருதய விஜில்லா - திண்டுக்கல், ஜோஸ்வா சந்தோஷ், கெர்மன், கரோலின் பிலலேந்திரன், ததேயுஸ் கரோலின் -திருப்பூர், அற்புதசீலி -திண்டுக்கல், -மாசில்லா -தூத்துகுடி, புஷ்பக்கன்னு -கோவை, சிப்ரியான்-தெளி, ஜோசப்சக்கர்ஜானி- திருச்சி, மேரி மார்கிரேட்- திருச்சி, பாத்திமா, , மார்கிரேட் பெல்சியா, லீலாவதி, ஜெகத்ரெட்சகர், அமலச்செல்வி, அன்னி பீட்டர்ராஜ், சுந்தர் ராஜ், ஜோஸ்பின் மேரி, கனிஷியஸ் விஷால், வியாகுல மேரி, ஜான் ஜோசப், சகாயம்*

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**திருமதி. ததேயுஸ் கரோலின்- திருப்பூர்**
**திருமதி. செலின் மேரி- திருச்சி**

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. M. Antony Shaji OSM.**






# அன்னையின் அமலம்

## பதிப்பாசிரியர் பக்கம்




அன்னை மரியின் பக்தர்களே! ஆகட்டும் இதழின் வாசகர்களே! ஆகட்டும் இதழின் வாயிலாக மீண்டும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி! டிசம்பர் மாதம் 8 ஆம் தேதி அன்னை மரியாள் அமல உற்பவி என்ற பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். அமலம் என்ற வார்த்தைக்குப் பல அர்த்தங்கள் இருக்கின்றன. புனிதம், மாசின்மை, தூய்மை மற்றும் கறையில்லாத என்று எத்தனையோ அர்த்தங்கள் இருக்கலாம். அமலத்தை அன்னை மரியாளோடு இணைக்கும்போது அமலம் என்ற வார்த்தை புது அர்த்தத்தைக் கொடுக்கின்றது.

கத்தோலிக்க திருஅவையில் அன்னை மரியாளுக்கு நான்கு மரியியல் கோட்பாடுகள் இருக்கின்றன. அதில் ஒரு கோட்பாடுதான் அன்னை மரியாள் அமல உற்பவி. இந்த அமல உற்பவம் என்பதன் அர்த்தம் என்னவென்றால் அன்னை மரியாள் தன் தாயின் வயிற்றில் பிறக்கும்போதே ஜென்மப் பாவமில்லாமல் பிறந்திருக்கின்றாள். இதனைத்தான் 1854 ஆம் ஆண்டு திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் ஒரு மரியியல் கோட்பாடாகப் பிரகடனப்படுத்தினார்.



## உள்ளே



கதையினில் கலந்த மரியா - 05
அன்னை மரியாவின் திருப்பயணம் - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
மீப்புப்பயணம் - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மாதா மன்றாட்டு மாலை - 25
பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் - 28
அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

இந்தக் கோட்பாட்டினை அவ்வளவு எளிதாக திருத்தந்தை பிரகடனப்படுத்தவில்லை. ஏனென்றால் பல சவால்களும் எதிர்ப்புகளும் திருஅவையில் எழ ஆரம்பித்தது. முக்கியமானப் பிரச்சனையாகப் பார்க்கப்பட்டது ஜென்மப்பாவமும், மீட்பும்.

படைப்பின் தொடக்கத்திலே ஆதிப் பெற்றோர் ஆதாம் ஏவாள் கீழ்ப்படியாமையால் பாவம் மனித குலத்தில் நுழைந்தது. அதுதான் ஜென்மப்பாவம், மனிதர்களாக பிறக்கின்ற அனைவரிலும் இந்த ஜென்மப்பாவம் இருக்கின்றது. இந்த ஜென்மப்பாவத்தில் இருந்து மனித குலத்தை மீட்பதற்குத்தான் இயேசு மனிதராக இந்த உலகில் பிறந்தார்.

இயேசு மனிதராகப் பிறந்த போதும் ஜென்மப்பாவம் அவரைத் தீண்டவில்லை, காரணம் அவர் மனித தலையீடுகளால்பிறக்கவில்லை, தூய ஆவியினால் பிறந்தவர். தமத்திருத்துவத்தின் இரண்டாம் நபர், கடவுளின் ஒரே மகன்.

ஆனால் அன்னை மரியாள் மனிதத் தலையீடுகளால் பிறந்தவள். சாதாரண மனிதப் பெண்மணி. இவர் எப்படி ஜென்மப்பாவமில்லாமல் பிறக்க முடியும். இன்னும் ஒரு விவாதம் திருஅவையில் எழுந்தது. இயேசு மனிதராகப் பிறந்து மனிதக் குலத்தை ஜென்மப்பாவத்தில் இருந்து மீட்டிருக்கின்றார். அப்படியிருக்க அன்னை மரியாள் ஜென்மப்பாவமில்லாமல் பிறந்தவள் ஆதலால் இயேசு அன்னை மரியாளுக்கு மீட்பர் இல்லையா?

இந்த இரண்டு விவாதத்திற்கும் பதில் ஒன்றுதான். கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை, அவர் நினைத்தால் மரியாளை ஜென்மப்பாவமில்லாமல் பிறக்க வைக்க முடியும். ஆண்டவர் இயேசுவை அன்னை மரியாளுக்கு மீட்பராகவும் மாற்ற முடியும். இயேசு என்னும் மீட்பர் எப்போது வேண்டுமென்றாலும் மீட்பைக் கொடுப்பவர். அன்னை மரியாள் தன் தாயான அன்னம்மாள் வயிற்றில் கருவாகி உருவாகும்போதே அவளை ஜென்மப்பாவத்திலிருந்து மீட்டு விட்டார்.

இத்தனை எதிர்ப்புகளையும் கடவுளின் வல்லமையால் வெற்றிகரமாக முறியடித்துதான் திருத்தந்தை அந்த மரியியல் கோட்பாட்டை பிரகடப்படுத்தினார். அன்னை மரியாள் உண்மையாகவே அமல உற்பவி என்பதற்கான ஆதாரங்கள் என்னவென்றுப் பார்த்தால் 1858 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் பெர்னதெத் என்ற சிறுமிக்கு அன்னை மரியாள் 18 முறை காட்சியளித்தார். ஒருக்காட்சியில் சிறுமி பெர்னதெத் உங்கள் பெயர் என்ன? என்று கேட்டதற்கு அன்னை ‘நானே அமல உற்பவம்’ என்று கூறினார்.

**அமலம் என்ற புனிதம் நம்மிலும் மலரட்டும்**
**அமலம் என்ற தூய்மை நம்மிலும் துளிர்விடட்டும்.**





ஒன்றுமில்லை என்றார்கள். தாயின் கருணையால் குழந்தைக்கு எந்த வித ஆபத்தும் இல்லை. நன்றி அம்மா. *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

4. என் அண்ணன் மகளுக்கு திருமணம் நடக்க இருந்தது. அப்பொழுது தீராத மழை. என் அண்ணன் மிகவும் கஷ்டப்பட்டார். நான் ஜெபித்தேன். 23, 24 ஆகிய தேதிகளில் மழை இல்லாமல் என் ஜீவ மாதா நல்லபடியாக திருமணம் நடத்தி கொடுத்தார்கள்.
*இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

5. என் தம்பிக்கு இரண்டு மாத காலமாக வேலை இல்லாமல் இருந்தது. துபாயில் வேலை செய்து கொண்டிருந்தான். அவன் துபாய் போகும் போது எனக்கு வேலை கிடைக்க வேண்டும் என்று என்னிடம் சொன்னான். நான் ஜீவ மாதாவிடம் வேண்டினேன். அதேபோல் என் தம்பியிடம் வேறு வேலை உனக்கு கிடைக்கும் என்று நம்பிக்கை ஊட்டினேன். துபாய் சென்று இரண்டு நேர்முகத் தேர்வுக்கு போனான். முதலில் சம்பளம் குறைவாக கிடைத்தது. அடுத்தது சம்பளம் அதிகமாக கிடைத்தது. நல்ல ஊதிய உயர்வோடு வேலை கிடைத்ததற்கு நன்றி அம்மா.
*இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்பணி. லீபன் டேவிட். மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

நவம்பர் மாதம் 1 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

*1. ஆரோக்கியமேரி*

நான் உடல் நோயினாலும் மனக்கவலைகளினாலும் சோர்ந்து போனேன். நான் ஜீவமாதாவிடம் முதல் சனிக்கிழமை வந்து ஜெபித்தேன், எனக்கு கிருபையும் அருளும் கிடைத்தது. நோய்கள் நீங்கி நான் நலமாக உள்ளேன். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

*2. சிறுமலர்*

என் மகளுக்கு ஏழு மாதம் முன்பு திருமணம் நடந்தது. எங்கள் சொந்த ஊர் தேவகோட்டை. எங்கள் சொந்தக்கார பையனுக்கு கொடுக்கிறதாக இருந்தோம். நல்ல பையன் என்று எல்லாரும் சொன்னார்கள். நாங்களும் பத்திரிக்கை அடித்து எல்லோரிடம் கொடுத்துவிட்டோம் பின்பு தான் தெரிந்தது, மாப்பிள்ளைக்கு ஏற்கனவே திருமணம் ஆகி ஒரு குழந்தை உள்ளது என்று. மாப்பிள்ளை வீட்டார் உண்மையை சொல்லவில்லை, மாறி மாறி பேசினார்கள். பிறகு என் கணவரின் நண்பர் போலீசின் உதவியுடன் மகளை காப்பாற்றினோம். பிறகு நான் ஜீவ மாதாவிடம் உருக்கமாக மன்றாடினோம். என் மகள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்று. அதேபோல் என் மகளுக்கு திருமணம் நடத்த அருள் புரிந்தார். மன கவலைகள் நீக்கி மகிழ்வித்த மாதாவுக்கு கோடான கோடி நன்றிகள். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

3. என் பேரன் இலண்டனில் இருக்கிறான். என் மகளுக்குரிய சத்து மாத்திரைகளை எடுத்து நிறைய சாப்பிட்டுவிட்டான். என் மகள் பயந்துபோய் மருத்துவமனைக்கு அழைத்து சென்று பரிசோதனை செய்தார். நாங்கள் ஜீவ மாதாவிடம் மனமுருக மன்றாடி கொண்டிருந்தோம். பரிசோதனையில்





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஒரு சிறிய நகரத்தில், ஒவ்வொரு டிசம்பரிலும், மக்கள் தங்கள் வீடுகளை நட்சத்திரங்கள், விளக்குகள் மற்றும் தொட்டில்களால் அலங்கரித்தனர். ஆனால் நகர சதுக்கத்தின் நடுவில், யாரும் கவனம் செலுத்தாத ஒரு பழைய மர பெஞ்ச் இருந்தது. அது விரிசலிட்டு பழுதாகியிருந்தது.

குளிரான கிறிஸ்துமஸ் மாலையில், மிகவும் சோர்வடைந்த ஏழை பையன் நீண்ட நாள் கழித்து அந்த பெஞ்சில் அமர்ந்தான். அவன் காலணிகள் கிழிந்திருந்தன, அவன் கைகள் குளிர்ச்சியாக இருந்தன, அவன் இதயம் கனமாக உணர்ந்தது.

அவன் அங்கே அமர்ந்தபோது, மென்மையான இதயம் கொண்ட ஒரு முதியவர் அருகில் வந்து,

“மகனே, இவ்வளவு மகிழ்ச்சியான இரவில் நீ ஏன் சோகமாக இருக்கிறாய்?” என்று கேட்டார்.

அவன் அதற்கு,

“எல்லோரும் கிறிஸ்துமஸைக் கொண்டாடுகிறார்கள், பரிசுகளை வாங்குகிறார்கள், தங்கள் வீடுகளை அலங்கரிக்கிறார்கள்... ஆனால் எனக்கு கொடுக்க எதுவும் இல்லை, கொண்டாட எதுவும் இல்லை.”

முதியவர் மெதுவாகச் சிரித்துக்கொண்டே, “கிறிஸ்துமஸ் என்பது நீ கொடுப்பதைப் பற்றியது அல்ல, நீ பகிர்ந்து கொள்வதைப் பற்றியது.”

அவர் தனது கேக்கில் பாதியை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

அவன் தயங்கி, “நீங்க ஏன் எனக்குப் கொடுக்கிறீங்க? உங்களை எனக்கு தெரியாது” என்றான்.

பெரியவர் அவனின் தோளில் கையை வைத்து, “அந்த முதல் கிறிஸ்துமஸ் இரவில், இயேசு ஒரு ஏழை தொழுவத்தில் பிறந்தார். அவர் பகிர்ந்து கொள்ள வந்த அன்பின் பரிசைத் தவிர வேறு எந்த பரிசுகளும் அவரிடம் இல்லை. கடவுளால் ஒரு எளிய தொட்டிலைத் தேர்ந்தெடுக்க முடியுமென்றால், நம்பிக்கையைக் கொண்டுவர ஒரு எளிய பெஞ்சையும் அவரால் தேர்ந்தெடுக்க முடியும்.”

அவன் மெதுவாக சிரித்துக்கொண்டே அந்த மனிதனுடன் கேக்கை பகிர்ந்து கொண்டான். அவர்கள் ஒன்றாக அமர்ந்து பேசி சிரித்தனர். அந்த வழியாக நடந்து சென்ற சிலர் அவர்களைக் கவனித்து, தேநீர், சிற்றுண்டி மற்றும் அரவணைப்பை வழங்கினர். அந்த வழியாக வந்த இளைஞர் கூட்டம் இசை கருவிகள் வாசித்து கிறிஸ்துமஸ் பாடல்கள் பாடி ஆடினர்.

அன்று இரவு, பழைய பழுதடைந்த பெஞ்ச் முழு நகரத்திலும் கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியின் மையமாக மாறியது.

மறுநாள் காலை, மக்கள் அந்த முதியவரைத் தேடியபோது, அவர் எங்கும் காணப்படவில்லை.

ஆனால் யாரோ ஒருவர் பெஞ்சில் வார்த்தைகளை செதுக்கியிருந்தார்:

***“அன்பு பகிரப்படும் இடத்தில், கிறிஸ்து மீண்டும் பிறக்கிறார்.”***

ஒவ்வொரு கிறிஸ்துமஸிலும், கிறிஸ்து நம் இதயங்களுக்குள் பிரமாண்டமான கொண்டாட்டங்கள் மூலம் அல்ல, ஆனால் சிறிய கருணை செயல்கள் மூலம் வருகிறார். ஒரு புன்னகை, ஒரு அன்பான வார்த்தை, சிறு பகிர்வு, அர்த்தமுள்ள கிறிஸ்துமஸாக மாறும்.

அன்பு பகிரப்படும் ஒவ்வொரு இடமும் ஒரு புதிய ***பெத்லகேமாக*** மாறும்.

Merry Christmas & Happy New Year

# அன்னை மரியாவின் திருப்பயணங்கள்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

## பயணம் ஐந்து

### தொடக்கவுரை

நாம் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் மாதங்களில் மிகச் சிறந்த மாதமான டிசம்பர் இதோ பிறந்துள்ளது. திருவழிபாட்டு ஆண்டின் நாட்குறிப்பில் இடம்பெறும் மாபெரும் கிறிஸ்து பிறப்பு விழா அனைத்து உலகிற்கும் உள்ளங்களுக்கும் அமைதியையும் மகிழ்வையும் கொண்டுவரும் என்று எதிர்பார்த்து இருக்கின்றோம். நம் மீட்பராம் இயேசு கிறிஸ்து பிறந்து 2025 ஆண்டுகள் நிறைவுறும் ஜூபிலி ஆண்டையும் சிறப்பிக்க இரட்டிப்பு மகிழ்வுடன் திருப்பயணிகளாய் திருஅவையோடு இணைந்துள்ளோம். கிறிஸ்து பிறப்பின் தயாரிப்புக் காலத்தில் வாசகங்கள் நம்மை ஆன்மிக ரீதியாகவும் அறநெறி வழியிலும் நமது இதயங்களை இறைவனையும் இந்த ஏழை சமுதாயத்தையும் நோக்கித் திருப்புகின்றது. மனிதநேயமிக்க செயல்பாடுகளில் ஈடுபடுவதே இயேசுவின் பிறப்பைக் கொண்டாட சிறந்த வழியாகும். இந்த ஜூபிலி ஆண்டில் ஆண்டவரின் அருள்வரங்களைப் பெற்றிட பலவகையான திருப்பயணங்களை மேற்கொள்கிறோம். அத்தோடு நம்மைச் சுற்றி வாழும் ஏழை எளியவர், அகதிகள், சிறையில் இருப்போர் ஆகியோரின் உறைவிடங்களைத் தேடியும் பயணிப்பது பிறக்கவிருக்கும் பாலன் இயேசுவின் விருப்பமாகும். புனித கன்னி மரியா ஒப்பற்ற ஒரு திருப்பயணி. தம் வாழ்வில் மிக முக்கியமான திருப்பயணங்களைத் தனியாகவும் புனித வளனாருடனும் தனது அன்பு மகன் இயேசுவுடனும் மேற்கொண்டார். அவரின் ஐந்தாவது பயணமாகிய குழந்தை இயேசுவை எடுத்துக்கொண்டு எகிப்து நாட்டிற்குச் சென்றதைத் தியானிப்போம்.

### குழந்தைக்குப் பயந்த அரசன்

'நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்குத் தப்பி ஓடிச் செல்லும். நான் உமக்குச் சொல்லும் வரை அங்கேயே இரும். ஏனெனில் குழந்தையை ஏரோது கொல்வதற்காகத் தேடப்போகிறான்" (மத்தேயு 2:13) என்று ஆண்டவருடைய தூதர் புனித வளனாருக்குக் கனவில் தோன்றிக் கூறியதும் புனித திருக்குடும்பம்





கருவுற்றிருந்தார்" என்ற மத்தேயு 1:18 ஆம் இறைவார்த்தையை மேற்கோள்காட்டி, இறைமகன் இயேசுவின் மீட்பிற்கு மனித உடலெடுத்தல் மிகவும் முக்கியமான கருத்தாக கூறி அதன் வெளிப்பாடுதான் அன்னை மரியாவிடம் உடலெடுத்தார் என்று கூறி முடிக்கிறார்.

**அன்னை மரியாவின் தேர்ந்தெடுப்பு**

அன்னை மரியாவின் தேர்ந்தெடுப்பைப் பற்றி புனித பேசில் தெளிவுற எடுத்துரைக்கிறார். அன்னை மரியாவின் தேர்ந்தெடுத்தலை அன்னை மரியாவுக்கு கிடைத்த சலுகையாக மாபெரும் கொடையாக சித்தரிக்கிறார். மனுகுல மீட்பிற்கு கிறிஸ்துவின் மனித உடலெடுப்பை பற்றி பேசிய பேசில், அதில் அன்னை மரியா கிறிஸ்துவின் தாயாக இருக்க வேண்டும் என்ற திட்டம் நல்லதிட்டமென எடுத்துரைக்கிறார். யோசேப்புக்கு மண ஒப்பந்தம் செய்யப்பட்டவராக இறைவார்த்தையே எடுத்துரைக்கிறது, எனவே அதுவும் கிறிஸ்துவின் மீட்பு திட்டத்திற்கு தேவையான ஒன்று என்று புனித பேசில் வலியுறுத்துகிறார். எனவே அன்னை மரியாவின் தேர்ந்தெடுத்தல் என்பது கிறிஸ்துவின் மீட்பு திட்டத்தில் கடவுளின் திட்டம் அதிகமாக செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்று புனித பேசில் கூறுகிறார். இது மனிதத் திட்டம் என்று யாராலும் கூற இயலாது, எனவே இது முழுக்க முழுக்க கடவுளின் திட்டமே என்று புனித பேசில் தெளிவுபடுத்துகிறார்.

**தியோடோகோஸ் பற்றிய புனித பேசிலின் ஏற்புரை**

அனைத்து கப்பதோச்சிய தந்தையர்களும் அன்னை மரியாவுக்கு வழங்கப்பட்ட "***தியாடோகோஸ்*** என்ற தலைப்பை (அ) அன்னை மரியாள் கடவுளை தாங்கியவர்" என்ற தலைப்பை ஏற்றுக் கொள்கின்றனர். அதிலும் சிறப்பாக புனித பேசில் இத்தலைப்பை ஏற்றுக் கொள்கிறார் என்றுச் சொல்லி பின்வரும் அறிக்கையை அறிக்கையிடுகின்றார். "நான் எல்லாம் வல்ல தந்தையாகிய ஒரே கடவுளை அறிக்கையிட்டு ஏற்றுக்கொள்கிறேன். கடவுளாகிய தந்தையும், கடவுளாகிய மகனையும், கடவுளாகிய தூய ஆவியாரையும் ஏற்றுக் கொள்கிறேன்: மூன்று ஆட்களாக இருக்கும் ஒரே கடவுளை வணங்கி வழிபடுகிறேன். மனித உடல் எடுத்த மகனையும் அந்த மனித உடலெடுக்க காரணமாக இருந்த அன்னை மரியா கடவுளைத் தாங்கியவர் எனவும் ஏற்று அறிக்கையிடுகிறேன்." இந்த அறிக்கையின் வழியாக புனித பேசில் தாம் வாழ்ந்த தமது துறவு வாழ்வின் முதிர்ச்சியை வெளிப்படுத்துகிறார்.

**அன்னை மரியாவும் இறைவார்த்தையும்**

"பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும், உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" (லூக்கா 2:35) என்ற இறைவார்த்தையை மேற்கோள் காட்டி மாபெரும் மனிதராகிய ஆரிஜன் 'அன்னை மரியா பிறப்பு நிலைப் பாவத்தோடு பிறந்திருப்பார்' என்று அறிக்கையிட்டார். ஆனால் புனித பேசில் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் 'அன்னை மரியாவை கடவுள் பிறப்பு நிலைப் பாவத்தோடு பிறக்காமலிருப்பதற்கு சலுகை செய்தார்' என்று அறிக்கையிடுகிறார். "ஆண்டவரை எனது உள்ளம் போற்றி பெருமைப்படுத்துகின்றது, இது முதல் எல்லா தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக் 1:47-48) என்ற இறைவார்த்தைகளை மேற்கோள்காட்டி புனித பேசில், 'அன்னை மரியா தூய ஆவியாரை முழுமையாக பெற்றிருந்தார், தூய ஆவியாரையும் இறைவார்த்தையையும் பிரித்தல் ஆகாது' என்று கூற்றை அன்னை மரியாள் நிரூபிக்கிறார், என்று புனித பேசில் அன்னை மரியாவின் பாடலுக்கு விளக்கம் தருகிறார்.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச
சென்னை

26



சென்ற மாத இதழில், கப்பதோச்சியா தந்தையர்களின் பார்வையில், அதிலும் குறிப்பாக புனித பெரிய பேசிலின் பார்வையில் "அன்னை மரியாவின் அன்புறவை" பற்றி பார்த்தோம். அன்னை மரியாவை அழகோவியமாக வர்ணிக்கப்பட்டதை பற்றியும் பார்த்தோம். இம்மாத இதழில், புனித பேசில் அன்னை மரியாவின் அன்புறவில் எவ்வாறு உறுதியாக வாழ்ந்தார் என்று பார்ப்போம்.

**இயேசுவின் பிறப்பில் அகமகிழும் புனித பேசில்**

கிறிஸ்துவின் பிறப்பில் புனித பேசில் அகமகிழ்கிறார். காரணம், கிறிஸ்துவின் பிறப்பில் அன்னை மரியா எப்பொழுதும் தொடர்புபடுத்தப்படுகிறார். ஏசா 7:14 இவ்வார்த்தையும், யோவான் 1:14 இறைவார்த்தையும் கிறிஸ்துவின் பிறப்போடு அதிகம் தொடர்புடைய இறைவார்த்தைகள். ஒன்று, பழைய ஏற்பாட்டு இறைவார்த்தை, மற்றொன்று புதிய ஏற்பாட்டு இறைவார்த்தை, இந்த இரண்டு இறைவார்த்தையிலும் கிறிஸ்துவின் பிறப்பு பேசப்படுகிறது. அதேபோல், அன்னை மரியாவின் அன்புறவும் அறிக்கையிடப்படுகிறது. புனித பேசில் இந்த இரண்டு இறைவார்த்தையையிலும் அன்னை மரியாவின் பங்குகெடுப்பை ஆழமாக பார்த்து "கிறிஸ்துவின் பிறப்பு -அன்னை மரியாவின் அன்புறவு" என்று அறிக்கையிடுகின்றார். இதன் வழியாக புனித பேசில் அன்னை மரியாவின் கன்னிமைத் தன்மையை உறுதிப்படுத்துகிறார். பிறகு அன்னை மரியா கன்னியாகவே வாழ்ந்தார் என்று ஏற்று அறிக்கையிடுகின்றார். அன்னை மரியா கிறிஸ்துவில் (தனது மகனின் அன்புறவில்) நிலைத்திருந்தார்; தமது கன்னிமையிலும் நிலைத்திருந்தார் என்று புனித பேசில் தமது நம்பிக்கையை அறிக்கையிடுகின்றார். அன்னை மரியாவின் கன்னிமையை குறித்து அந்தியோக்கு நகரத்து இன்னாசியார் கூறுகின்ற கருத்தை புனித பேசிலும் முன்வைக்கிறார். அதாவது, அன்னை மரியாவின் கன்னிமை என்பது ஒரு 'மறைபொருள்' அது 'சாத்தானுக்கு மறைத்து வைக்கப்பட்டுள்ளது' என்று கூறுகிறார். ஆரிஜன் என்ற மாபெரும் மனிதரும் அன்னை மரியாவின் கன்னிமைக் குறித்து புனித பேசில் கூறிய கருத்துக்களை ஏற்றுக் கொள்கிறார்.

**கிறிஸ்துவின் மனித உடல்**

கிறிஸ்து பிறப்பு பெருவிழா அன்று புனித பேசில் ஆற்றிய மறைவுரையில் "கடவுள் மனிதர் ஆனார்" என்ற யோவான் 1:14 இறைவார்த்தையை தொடர்ந்து பயன்படுத்தி அந்த தெய்வீக உடல் மனித உடலெடுப்பதற்கு, மனிதர் போன்று நம்மோடு வாழ்வதற்கு, அன்னை மரியா தான் முக்கிய காரணி என்று வலியுறுத்துகிறார். இன்னும் ஒரு படி மேலே சென்று சிதைந்த மனிதர்களின் உடலை மீட்பதற்காகவே கடவுள் மனிதராக உடலேற்றார் என்று அறிக்கையிடுகிறார். அந்த மனித உடலை அன்னை மரியாவிடமிருந்து பெற்றார், என்று கூறுகிறார்.

"அவருடைய தாய் மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது: அவர்கள் கூடிவாழும் முன் மரியா கருவுற்றிருந்தது தெரியவந்தது: அவர் தூய ஆவியால்





எகிப்து நாட்டிற்கு அகதிகளாகச் சென்றதை ஒத்தமை நற்செய்தியாளர்களில் மத்தேயு மட்டுமே தமது நற்செய்தியில் படம்பிடித்துக் காட்டுகிறார். இயேசு பிறந்ததும் முதலில் இடையர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தினார். இவ்வாறு தான் ஏழையருக்காக, அவர்கள் வாழ்வு வளம் பெற பிறந்துள்ளேன் என்ற செய்தியை வழங்கினார். பின்னர் விண்மீன் வழியே கீழ்த்திசை ஞானியர் மூவர் பெத்லகேம் குடிலை அடையவும் அழைப்பு விடுத்தார். மாட்டுத்தொழுவத்தில் பிறந்த இயேசுவைத் தேடி ஏரோது அரசரின் அரண்மனைக்குச் சென்றதும் விண்மீன் தற்காலிகமாக மறைகிறது. 'யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்" (மத்தேயு 2:2) என்ற ஞானியரின் கூற்றைக் கேட்டதும் அரசன் கலங்கினான். அவனோடு எருசலேம் முழுவதும் கலங்கிற்று. தனது நாட்டை தனக்குப் பின் ஆள உதயமான புதிய அரசரை நினைத்து மிகக் கவலைப்பட்டான்.

இறைவனின் திருவிளையாடலை நாம் இங்கு காண்கிறோம். கிழக்கிலிருந்து ஞானிகளை அழைத்து வந்த விண்மீன் பெத்லகேம் குடிலுக்குச் சென்றிருக்கலாம். ஆனால் அது மறைந்துவிட, குழந்தையைத் தேடி அரண்மனைக்கு வருகின்றனர். அவர்களின் வருகை மீக்கா இறைவாக்கினரின் வார்த்தைகளை அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வருகின்றது. 'நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய் ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாக ஆளப் போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்" (மீக்கா 5:2) என்பதை அனைத்துத் தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும் ஏற்றுக்கொண்டு மெசியாவின் பிறப்பை உறுதி செய்கின்றனர். ஆனால் அங்கு யாருமே மகிழ்ச்சியுற்றதாகத் தெரியவில்லை. மீட்பரைப் பார்க்கவும் துணியவில்லை. மாந்தர் அனைவரின் இதயங்களையும் அரசாட்சி செய்யப் பிறந்திருக்கும் பாலன் தனது அரியணையை அபகரித்துக் கொள்ளப் போகிறாரே என்ற கவலை, அங்கலாய்ப்பு, பொறாமை, கோபம் அனைத்தும் ஏரோதுவின் உள்ளத்தில் கருக்கொள்கின்றன. ஆனால் ஞானிகளிடம் தனியாகச் சென்று விண்மீன் தோன்றிய காலத்தைப் பற்றி விசாரித்து உறுதி செய்து கொண்டான். 'நீங்கள் சென்று குழந்தையைக் குறித்துத் திட்டவட்டமாய்க் கேட்டு எனக்கு அறிவியுங்கள். அப்பொழுது நானும் சென்று அக்குழந்தையை வணங்குவேன்" (மத்தேயு 2:7) என்று கூறி அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பி வைத்தான்.

ஏரோது அரசனின் நிழலை விட்டுப் பிரிந்ததுமே விண்மீன் மீண்டும் தோன்றி, குழந்தை இருந்த இடத்திற்கு மேல் வந்து நிற்கும் வரை

அவர்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்தது. அங்கே நின்ற விண்மீனைக் கண்டதும் அவர்கள் மட்டில்லாப் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து மரியாவின் மடியில் இருந்த குழந்தையை வணங்கினார்கள். ஏரோதிடம் திரும்பிப் போக வேண்டாம் என்று கனவில் அவர்கள் எச்சரிக்கப்பட்டதால் வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினார்கள். ஞானிகள் தன்னை ஏமாற்றியதை ஏரோது கண்டு மிகுந்த சீற்றங்கொண்டான். அவன் சுற்றுப்புறமெங்கும் ஆள்களை அனுப்பி, இரண்டு வயதும் அதற்கு உட்பட்டதுமான எல்லா ஆண் குழந்தைகளையும் கொல்வதற்குத் திட்டமிட்டான். இத்திட்டமானது யோசேப்பிற்கு கனவில் ஆண்டவரின் தூதரால் அறிவிக்கப்பட, அவர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு இரவிலேயே எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

**திருக்குடும்பத்தின் பயணம்**

இறைவாக்கினர் சிமியோனின் கூற்று உண்மையாகிறது. ‘இதோ, இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும்” (லூக்கா 2:34). இயேசுவின் பிறப்பிலேயே அவரது மரணம் எதிரொலிப்பதைக் காண்கிறோம். ஆம், இறப்பதற்காகவே அவர் பிறந்தார். நமக்கு வாழ்வு தருவதற்காக, நாம் மீட்படைய தந்தை கடவுள் தனது அன்பு மகனை ஏரோது மன்னனின் வாளிலிருந்து காப்பாற்றுகின்றார். இருபதுக்கும் மேற்பட்ட மாசற்ற குழந்தைகள் கொல்லப்படுகின்றன. அதன் இளம் தாய்மார்களின் புலம்பலும் பேரழுகையும் இராமாவிலே கேட்கின்றது. ஆறுதல் பெற மறுக்கின்றது. தமது பச்சிளம் குழந்தைகளை நினைத்து அழுது கொண்டு இருக்கின்றனர். ஆனால் திருக்குடும்பம் இறைவன் மீது கொண்ட நம்பிக்கையில் அமைதியாக தனது திருப்பயணத்தைத் தொடர்ந்தது.

எகிப்துக்கு குழந்தை இயேசுவோடு தப்பித்து ஓடுதல் அன்னையின் இரண்டாவது வியாகுலமாகவும் தியானிக்கப்படுகிறது. இப்பயணத்தில் எத்தனையோ சவால்கள், இடர்பாடுகள், அச்சம். ஆயினும் அன்னை மரியாவும் புனித வளனாரும் இறைவன் மீது நம்பிக்கை கொண்டு அவரது அன்பு மகனைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் தமது பயணத்தைத் துணிவுடன் மேற்கொண்டனர். ஒரு சிறிய சத்தம் கேட்ட பொழுதிலும், எங்கே ஏரோதின் வீரர்கள் தம் அருகில் நெருங்கி விட்டனரோ என்று தங்கள் வேகத்தைக் கூட்டினர்.

தொடர்ச்சி 27 ம் பக்கம்...........





என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? (லூக் 1:43) என்னும் இறைவார்த்தையின் படி அன்னை மரியா மீட்பராகிய சேசுவின் தாயாக இருக்கிறார்கள். எனவே அவர்கள் நமக்கும் தாயாக இருக்கின்றார்கள். அன்னையின் அமல உற்பவ திருவிழாவிற்கும், கிறிஸ்துவின் பிறப்பு பெருவிழாவிற்கும் நாம் சிறப்பான முறையில் தயார் செய்ய கடமைப்பட்டுள்ளோம். .

**ஆன்மீக தயாரிப்பு:**

அன்னை மரியாவையும், திவ்விய இயேசுவையும் மகிழ்ச்சி அடைய செய்ய நாம் முதலில் நம்முடைய நினைத்து மிகுந்த மனஸ்தாபத்தோடு நல்ல பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டும். வானதூதரின் வாழ்த்துரையான அருள் நிறை மந்திரத்தின் மூலம் தொடர்ந்து அன்னை மரியாவை நாம் வாழ்த்த வேண்டும். அருள் நிறை மந்திரத்தைக் கொண்டு தன்னை வாழ்த்துவதை விட வேறு எந்த விதத்திலும் தனக்கு மிகவும் உகந்த முறையில் தன்னை வாழ்த்திப் போற்ற யாராலும் முடியாது என்று புனித மெட்டில்டாவிடம் அன்னை மரியே கூறியுள்ளார்கள்.

பரிசுத்த ஜெபமாலையின் மீது பக்தி கொண்டிருப்பது மோட்சம் செல்வதற்கு மிகச் சிறந்த உறுதிப்பாடாகும். எனவே ஒவ்வொருநாளும் ஜெபமாலையின் இருபது தேவ இரகசியங்களையும் தியானித்து ஜெபமாலை செபிப்பது பைபிளின் புதிய ஏற்பாட்டை ஒருமுறை படித்து முடிப்பதற்கு சமம் எனலாம்.

அமலோற்பவ அன்னைக்கும் குழந்தை இயேசுவுக்கும் நாம் என்ன பரிசு கொடுக்கலாம்? அவர்கள் மிகவும் விரும்புவது ஆன்மாக்கள்தான். ஆன்மர்கள் மீது எல்லையில்லா பேரன்பு கொண்டதாலேயே சுதனாகிய சர்வேசுரன் மனித அவதாரம் கொண்டார். ஆன்மாக்களை எவ்வாறு நாம் இயேசுவுக்கும் மாதாவுக்கும் கொடுப்பது? உத்தரிக்கும் ஸ்தலத்தில் உள்ள ஆன்மாக்கள் கடவுளின் நீதிக்கு பரிகாரம் செய்யும் பரிசுத்த ஆன்மாக்கள். அவர்கள் இனிமேல் பாவம் செய்து கடவுளை விட்டு பிரியமுடியாது. எனவே உத்தரிக்கிற ஸ்தலத்தில் அவர்கள் செலுத்த வேண்டிய கடனை நம்முடைய செப தவத்தின் மூலம் நாம் தீர்த்தோம் என்றால் அவ்வான்மாக்கள் மோட்சம் சென்று கடவுளை முகமுகமாக தரிசிக்கும் பாக்கியம் பெறுவார்கள். எனவே நம் குடும்பத்தில் இறந்தவர்கள், நம்முடைய முன்னோர்கள், நமக்கு தெரிந்தவர்களின் குடும்பங்களில் இறந்தவர்கள், யாரும் நினையாத ஆன்மாக்கள், மாசற்ற குழந்தைகளின் ஆன்மாக்கள் இவர்கள் அனைவரும் கிறிஸ்து பிறப்பு பெருவிழா அன்று மோட்சம் செல்ல ஆகமன காலத்தின் முதல் நாளிலிருந்து மெழுகுவர்த்தி ஏந்தி ஜெபமாலை சொல்லியும் நம்மால் முடிந்த வேறு ஏதேனும் செபங்களை சொல்லியும், நவநாள் செபங்கள் சொல்லியும், உபவாசம் இருந்தும், நம்முடைய துன்பங்களை ஒப்புக்கொடுத்தும் பக்தி முயற்சிகளை செய்து கிறிஸ்மஸ் திருப்பலியில் பங்கெடுத்து திவ்விய நற்கருணை உட்கொண்டு ஒப்புக்கொடுப்போம். அப்போது அந்த ஆன்மாக்கள் அன்றைய தினம் சிறப்பு சலுகை பெற்று நம்முடைய செப தவ முயற்சிகளால் மோட்சம் சேருவார்கள். இதைவிட மிகச் சிறந்த பரிசை நாம் சேசுவுக்கும் மாதாவுக்கும் கொடுக்க முடியாது. முயற்சி செய்யுங்கள் கடவுளின் ஆசீரை பெற்றுக் கொள்ளுங்கள். அமலோற்பவ மாமரியே வாழ்க!



# பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 14

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

அன்னை மரியாவை அமல உற்பவம் என்றும் மீட்பரின் தாய் என்றும் அழைக்கின்றோம். அன்னையின் அமலோற்பவ மகிமையைக் குறித்தும் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தாயாக இருக்கும் மாண்பைக் குறித்தும் சிந்திக்கவும், நம்முடைய மீட்பிற்காக கடவுளின் அழைப்பிற்கும் திட்டத்திற்கும் முழு கீழ்ப்படிதலோடு ஆகட்டும் என்று தன்னையே ஒப்புக் கொடுத்து கடவுளின் திட்டத்திற்கு அடிபணிந்த அன்னை மரியாவை மகிமைபடுத்துவதன் மூலம் மூவொரு இறைவனை எவ்வாறு மகிமைப்படுத்தலாம் என்று சிந்திக்கவும் செயல்படவும் அழைக்கின்றேன்.

**அன்னை மரியாவின் அமல உற்பவம்:**

தந்தையாம் இறைவன் அன்னை மரியாவை ஜென்ம பாவத்திலிருந்து பாதுகாப்பது தகுதியானதாக இருந்தது. காலத்திற்கு முன்பே தொடக்கத்தில் அவர் என்னைப் படைத்தார் (சீ.ஞா.24:9) என்னும் இறைவார்த்தையின் படி மாமரி தந்தையாம் இறைவனின் தலைப்பேறான மகளாக இருந்தார்கள். ஆண்டவர் தம் படைப்பின் தொடக்கத்திலேயே தொல்பழங்காலத்தில் எதையும் படைக்கும் முன்னரே என்னைப் படைத்தார் (நீ.மொ.8:22) என்னும் இறைவார்த்தையும் இதனை உறுதிபடுத்துகிறது. அலெக்சாந்திரியாவின் டெனிஸ் ஜீவியத்தின் ஒரே ஒரு மகள் என்று மாமரியை அழைக்கின்றார்.

சுதனாகிய இறைவன் தன்னுடைய திருத்தாயாரை பாவத்திலிருந்து பாதுகாக்க வேண்டியது மிக அவசியமாயிருந்தது. தேவ திருச்சுதன் மாமரியிடமிருந்து பாவமின்றிப் பிறப்பதற்காக, மாமரி பாவமின்றி கருத்தரிக்கப்பட்டார்கள் என்ற வார்த்தைகள் புனித பிரிஜித்தம்மாளுக்கு வெளிப்படுத்தப்பட்டன. மாமரி தனக்கு(இயேசுவுக்கு) தாயாக இருக்குமாறு அன்னை மரியாவை தேர்ந்துகொண்டதால், அன்னை மரியாவை பாவ மாசு அணுகாமால் பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது.

மாமரி ஆண்டவரின் தேவாலயம் என்றும், பரிசுத்த ஆவியானவர் தங்கும் பரிசுத்த ஸ்தலம் என்றும் அழைக்கப்படுகிறார்கள். ஏனெனில் பரிசுத்த ஆவியானவரின் செயலால் அவர்கள் அவதரித்த வார்த்தையானவருக்குத் தாயாக ஆனார்கள் என்று புனித தாமஸ் அக்குயினாஸ் கூறுகிறார்.

என் அன்பே, நீ முழுவதும் அழகே! மறுவோ உன்னில் சிறிதும் இலதே! (இ.பா.4:7) என்னும் இறைவார்த்தைகள் மாதாவின் அமல உற்பவத்தை துல்லியமாகக் குறிப்பதாக புனித சியென்னா பெர்னார்தீனும், புனித லாரென்ஸ் யுஸ்தீனியனும் புரிந்து கொண்டார்கள்.

1854 டிசம்பர் 8 அன்று அதிகாரபூர்வமான முறையில் மாமரியின் அமல உற்பவத்தை விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்தார்.

**மீட்பரின் தாய்:**





# அன்னையின் 83 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## ∴போர்வியேரே அன்னை பேராலயம், லியோன், பிரான்சு

∴போர்வியேரே என்பது லியோன் நகரின் பழமையான பகுதியின் வட பகுதியில் அமைந்துள்ள பகுதியாகும். இங்கு, கி.மு. 43 ஆண்டிலிருந்தே உரோமையர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. இப்பகுதியில் உள்ள ஒரு குன்றின் மீது கட்டப்பட்ட அன்னைக்கு நேர்ந்தளிக்கப்பட்ட ஆலயமானது ∴போர்வியேரே அன்னை பேராலயம் என்றழைக்கப்படுகிறது.

தற்போது காணப்படும் வானுயர்ந்த ஆலயமானது சில நன்கொடையாளர்களின் உதவியுடன் கி.பி. 1872ஆம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்டு, கி.பி. 1896ஆம் ஆண்டு நிறைவுபெற்றது.



லியோன் நகரின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்த இந்த ஆலயம் ஒரு நீண்ட வரலாறு உடையதாகும். கி.பி. 1643ஆம் ஆண்டு ஐரோப்பிய கண்டம் புபோனிக் கொள்ளை நோய்க்கு உள்ளானது. ஆயிரக்கணக்கான மக்கள் எல்லாப் பகுதிகளிலும் மாண்டனர். லியோன் நகரத்தையும் இந்நோய் விட்டுவைக்கவில்லை. லியோன் நகரத்து மக்கள், தாங்கள் இந்நோயிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுதலை அன்னையின் திருவடிகளில் சமர்ப்பித்தனர். கொள்ளை நோயிலிருந்து நகரம் பாதுகாக்கப்பட்டால் அன்னைக்கு ஒரு ஆலயம் கட்டி நேர்ந்தளிப்பதாக வாக்குறுதி கொடுத்தனர். புபோனிக் கொள்ளை

நோயின் தாக்கத்திலிருந்து லியோன் நகர் பாதுகாக்கப்பட்டது. லியோன் நகர மக்களும் தாங்கள் அன்னைக்கு தந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம் ஆலயம் ஒன்றைக் கட்டி நேர்ந்தளித்தனர்.

அன்னையின் பரிந்துரையால் தாங்கள் பெற்றுக் கொண்ட நலன்களுக்காக, லியோன் நகர மக்கள் அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 8ஆம் தேதி அன்னைக்கு விழா எடுத்தனர். அன்னை மரியாள் அமல உற்பவி என்கிற வேதசத்தியம் திருஅவையால் கி.பி.



1854ஆம் ஆண்டு திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் அவர்களால் அறிவிக்கப்பட்டது என்றாலும், விசுவாசிகளின் உள்ளத்திலும், வழிபாடுகளிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இருந்ததை நம்மால் உணர முடிகிறது. “ஒளியின் விழா” என்றழைக்கப்பட்டு கொண்டாடப்பட்ட இந்நாளில், லியோன் நகரமே விழாக்கோலம் பூண்டிருக்கும். மக்கள் எரியும் திரிகளை கைகளில் ஏந்தியவர்களாக அன்னையின் ஆலயம் எழுந்தருளியிருக்கும் குன்றின் மீது பவனியாக ஏறிச் சென்று அன்னைக்கு தங்கள் நன்றிகளை காணிக்கையாக்குகின்றனர்.

தொடர்ச்சியாக, கி.பி. 1832ஆம் ஏற்பட்ட காலரா நோயிலிருந்தும், கி.பி. 1870ஆம் ஆண்டு புருஷ்ய படையெடுப்பின் போது அன்னையின் அரவணைப்பில் இருந்த இந்நகரம் பாதுகாக்கப்பட்டது. வரலாற்றில் மிகப்பெரிய சோதனைக் காலங்களில் மக்கள் அன்னையின் பாதுகாப்பை உரிமையுடன் வேண்டி பெற்றுக்கொண்டனர்.

பாரீஸ் மற்றும் லியோன் நகரங்களை கம்யூன்கள் கைப்பற்றி அங்கிருந்த ஆலயங்களுக்கும், வழிப்பாட்டு இடங்களுக்கும் அவசங்கை ஏற்படுத்திய விளைவே, இந்நகரங்களில் கட்டப்பட்ட மிகப்பெரிய ஆலயங்கள் ஆகும். பாரீஸ் நகரில் கட்டப்பட்ட திரு இருதய பேராலயமும், லியோன் நகரில் கட்டப்பட்ட ஃபோர்வியேரே அன்னை பேராலயமும் இதற்கு சான்றுகளாகும்.

ஃபோர்வியேரே குன்றின் மீது அமைந்துள்ள இப்பேராலயமானது, நகரின் எப்பகுதியில் இருந்து பார்த்தாலும் அனைவரும் காணும் விதமாக கட்டப்பட்டுள்ளது. லியோன் நகரின் அழியா அடையாளமாக





8-ம் பக்க தொடர்ச்சி.........

பாலைவனப் பகுதியில் செல்லும் போது உடலில் ஏற்படும் வேதனைகள், மறைந்திருந்து தாக்கும் திருடர் பயம், உணவு, இரவு சற்று இளைப்பாற புகலிடம், காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல் என்று பலவகையான சவால்களை சந்தித்தவர்களாய் திருக்குடும்பம் நகர்ந்தது. இந்த நீண்ட பயணத்தில் தம் முன்னோர் எகிப்தில் அனுபவித்த துன்பங்களை எண்ணிப் பார்த்தனர். இறைவனே தன் உள்ளத்தில் பொருமினார் என்று விடுதலைப் பயண நூலில் வாசிக்கின்றோம். அவர்களை விடுவிக்க மோசேயை அழைத்தது, பாரவோனின் கொடுமைகளை முறியடிக்க அவரை ஒப்பற்ற தலைவராக உருவாக்கியது, செங்கடலைக் கடந்தது, எகிப்தின் தலைச்சன் பிள்ளைகளைக் கொன்றது, நாற்பது ஆண்டுகளாக இஸ்ரயேல் இனம் பாலைவனத்தில் நடந்தது அனைத்தையும் நினைவில் கொண்டார்கள். பகலில் மேகத் தூணாகவும், இரவில் நெருப்புத் தூணாகவும் இறைவன் அவர்களைப் பாதுகாத்தார். அந்த இறைவன் தானே இப்போது நம் கரங்களில் தவழ்கின்றார் என்று மரியாவும் வளனாரும் தம் நம்பிக்கையை ஆழமாக்குகின்றனர்.

சிறிய கதை ஒன்று கூட மக்களிடையே நிலைத்தது. நெடும் பயணத்தில் குழந்தை இயேசுவுக்குக் காய்ச்சல் வர, மரியா சற்று சூடான நீரைத் தேடுகிறார். வழியில் காணப்பட்ட ஒரு குடிசைக்குள் சென்று உதவியைப் பெற விழைகின்றார். அங்கே ஒரு குழந்தை அம்மை நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தது. மரியாவுக்கு வெந்நீர் கொடுக்கவே, குழந்தையின் அம்மை உடனே நீங்கியது. இன்னும் எத்தனையோ அற்புதங்கள் நிகழ்ந்திருக்கும். இயேசு நம் அருகில் இருந்தால் எதுவும் நமக்குத் தேவையில்லை. எந்தத் தீமையும் நம்மை அணுகாது. இந்த நம்பிக்கையில் இந்த ஜூபிலி ஆண்டின் பயணத்தை மேற்கொள்வோம். செப மனநிலையில் இறைவார்த்தையைத் தியானிக்கும் நாம், ஏழை எளியவருக்கும் உதவி செய்ய வேண்டும். விசுவாசமும் செயல்பாடுகளும் இணைந்து போகும் ஒருங்கிணைந்த ஆன்மிகம் நமக்குத் தேவை. அதுவே உண்மையான ஆன்மீகம் என்ற உறுதிப்பாடு கிறிஸ்தவர்களாகிய நமக்குத் தேவையாகிறது.

தொடரும் . . .

கர்தினால் நியுமன், நம் அன்னையைப் பற்றி கூறும் போது இவ்வாறாக கூறுகிறார், *"David, King of Israel is a figure or type of our Lord and his power is a figure that denotes our Lord's Virgin Mary"*. புனித லாரன்ஸ், அன்னையின் கருவறை கோபுரமாக இருந்து இயேசுவுக்கு பாதுகாப்பு அரனாக இருந்தது என்று கூறுகின்றார். புனித பெரிய ஆல்பர்ட், 'அன்னை மரியா சோதனைகளில் அபாய வேளைகளில் தன்னை அண்டி வந்தோருக்கு பாதுகாப்பாக, அரனாக இருக்கிறார்' என்று கூறுகிறார். மேலும் இந்த "கோபுரம்" என்ற உருவகமானது அன்னையின் பழுதற்ற கன்னி தன்மையின் அடையாளமாக இருக்கிறது என்றும் கூறுகிறார்.
மேலும் இனிமைமிகு பாடல் 4:4 கூறப்பட்டிருக்கும் "ஆயிரம் கேடயங்கள்" மரியாவின் ஆயிரம் புண்ணியங்களை குறிப்பிடுவதாக இருக்கிறது. முற்காலத்தில் போரில் பகைவர்கள் பயந்து ஓட வேண்டும் என்பதற்காக போருக்கு செல்லும் அரசர்கள் அம்புகள், மார்பு கவசங்கள் போன்ற படைக்கலன்களையும் பாதுகாப்பு கவசங்களையும் அணிந்து கொண்டு பகைவர் முன் தோன்றுவர். அது போலவே கடவுள் நம்மை எல்லாம் இவ்வுலக மாயைகளுடன் போரிட்டு சாத்தான்களை விரட்டி அடித்து நம்மை விண்ணுலகத்திற்கு அழைத்துச் செல்வதற்காக வீராங்கனை அன்னை மரியாவை 'ஆயிரம் கேடயங்கள்' என்ற ஆயிரம் புண்ணியங்களால் அணிசெய்துள்ளார், எனவேதான் ஆயிரக்கணக்கான ஆபத்துகளில் இருந்து நம்மை அன்னை மரியா பாதுகாக்க வேண்டும் என்பதற்காக ஆண்டவர் அவரை ஆயிரம் புண்ணியங்களால் அணி செய்துள்ளார் என்று புனித தாமஸ் கூறுகிறார்.

எனவேதான் தாவீது இராசாவின் உப்பரிகையான நம் மரியாவிடம், நம் மூதாதையர் கொண்டிருந்த அசையாத நம்பிக்கையும், இறைவாக்கினர்களின் எதிர்நோக்கும், அப்போஸ்தலர்களின் தனியாத ஆர்வமும், வேத சாட்சிகளின் உறுதியான உள்ளமும், அறிஞர்களின் ஞானமும், நீதி தலைவர்களின் நீதியும், கண்ணியர்களின் கற்பும் மற்றும் எல்லா புனித புனிதர்களின் புனித தன்மையும் ஒருங்கே அமைந்த படைக்கலனாக இருக்கிறது.
இந்த அன்னை மரியா ஆன்மீக பாதுகாப்பு மற்றும் அடைக்கலம் தரும் மரியாவாக, தாவீது ராஜாவின் கோபுரமாக மட்டுமில்லாமல் திருஅவையின் உப்பரிகையாக கோபுரமாக இருக்கிறார். ஆகவேதான் அன்னைக்கு வணக்கம் செலுத்தும் கத்தோலிக்க நாடுகளில் இயேசுவின் மேல் நம்பிக்கை வளர்த்துக் கொண்டே போகிறது. மாறாக ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து மற்றும் இங்கிலாந்து போன்ற பிரிவினை சபையினர் வாழும் நாடுகளில், மரியாவை மறந்த நாடுகளில், இயேசுவின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை தளர்ந்து கொண்டே போகிறது, என்று கர்தினால் நியூமன் கூறுகிறார்.
ஆக, அன்னையின்முன் இவ்வுலக வானளாவிய கோபுரங்கள் எல்லாம் அழிந்து போகக்கூடியவை, இவ்வுலக சக்திகளும், படைப்புகளும், படைகளும் மடிந்து மக்கிப்போகக் கூடியவை என்பதை நாம் உணர வேண்டும். இவ்வுலகில் நம்மை காக்கும் தீய சக்திகளை நம் அன்னையின் துணை கொண்டு அழிக்க வேண்டும். அன்னையின் அரவணைப்பில் இருப்பது நாம் நம் தாயின் கருவறையில் இருப்பது போன்றது. அதுபோல ஒரு பாதுகாப்பான இடம் என்று நமக்கு வெளியே வேறெங்கும் இல்லை. எனவே, "தாயே, தாவீது ராஜாவின் உட்பரிகையே, எங்கள் தஞ்சம் நீயே" என தாயின் புகழ் பாடுவோம்.






அமைந்துள்ள இப்பேராலயத்தின் வடிவமைப்பை பியேரே போஸ்ஸான் என்பவர், ரொமெனெஸ்கோ மற்றும் பைசாந்திய கட்டிட கலைகளின் கலவையாக உருவாக்கினார். இக்கட்டிக்கலையின் பிணைப்பானது மிக விந்தையாக பார்க்கப்பட்டது. இப்பேராலயமானது 86 மீட்டர் நீளமும், 34 மீட்டர் அகலமும் உடையது. இப்பேராலயத்தில் நான்கு கோபுரங்கள் உள்ளன. ஐந்தாவதாக அமைந்துள்ள மணிக்கூண்டில் மேல் அன்னையின் திருச் சுரூபமானது வைக்கப்பட்டுள்ளது.



ஆலயத்தில் உள்ள மொசைக் ஓவியங்களும், கண்ணாடி ஓவியங்களும் காண்போரின் உள்ளத்தை கவர்கின்றன. லியோன் நகரத்து வருகின்ற சுற்றுலா பயணிகள், இந்த ஓவியங்களை பார்ப்பதற்காகவே ∴போர்வியேரே வருகின்றனர். இந்த ஆலயத்தில் புனித வளனாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிற்றாலயம் உள்ளது.



∴போர்வியேரேவில் இரண்டு அடுக்குகள் உள்ளன. மேல் தளத்தில் உள்ள ஆலயமானது மொசைக் மற்றும் கண்ணாடி ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மேல் கோவில் மூன்று குழைவு கோபுரங்களையும், ஆறு கண்ணாடி ஓவியங்களை உடைய சன்னல்களையும் கொண்டுள்ளது. இச்சன்னல் வழியாக பாயும் ஒளியானது ஆலயத்தின் அழகை மேன்மைப்படுத்துகிறது. இந்த ஆலயத்தில் அழகும், உயரிய தரமும் உடைய கர்ராரா பளிங்கு கற்களும், வடக்கு இத்தாலியிருந்து கொணரப்பட்ட ரோஸ் நிற கிரானைட் கற்களும், ஆல்ப்ஸ் மலையில் அமைந்துள்ள சவோய் பகுதியிலிருந்து கொணரப்பட்ட நீல, பால்வெண்மை, பச்சை நிற பளிங்கு கற்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு நிறங்கள் ஒருங்கிணைந்து



அமைகக்கப்பட்டுள்ள ஆலயத்தின் உட்பகுதி ஒரு வண்ண விளையாட்டை நம் கண்முன் கொணருகின்றன.

இந்த ஆலயமானது மூன்று மையபகுதிகளையும், மூன்று பக்கவாட்டு பகுதிகளையும் கொண்டுள்ளது. இப்பெரிய ஆலயமாத்தில் 16 மிகப்பெரிய தூண்கள் அமைந்துள்ளன. இத்தூண்கள் அனைத்தும் கலைநயத்துடன் கட்டப்பட்டுள்ளன. இங்கு எட்டு சிற்றாலயங்கள் உள்ளன. கீழ் தள ஆலயமானது மிக எளிமையான முறையில் கட்டப்பட்டுள்ளது.



ஆலயத்தின மேல் பகுதிக்கு செல்ல வளைவு படிக்கட்டுகள் அமைகக்கப்பட்டுள்ளன.



இறைவனை நோக்கிய நம் பயணத்தில் ஏற்றங்களும், தாழ்வுகளும் உள்ளன என்பதையும், நம் பார்வைக்கு சில காரியங்கள் மறைகக்கப்பட்டாலும் இறைவனின் பார்வையிலிருந்து நாம் ஒருபோதும் விலக்கப்படுவது இல்லை என்பதையும் இப்படிக்கட்டுகள் சுட்டிகாட்டுகின்றன.

லியோன் நகர மக்கள் இந்த பேராலயத்தை தலைகீழான யானைக் கோயில் என்று பெயரிட்டழைக்கின்றனர். ஏனென்றால்,

ஆகட்டும்





# மாதா மன்றாட்டு மாலை



24

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## தாவீது இராஜாவின் உப்பரிகையே

இன்றைய நவீன உலகில் (Tower) என்று சொல்லப்படும் கோபுரத்தை (உப்பரிகை) அறியாதவர்கள் இருக்க முடியாது. ஏனென்றால் *Power* இல்லாத இடங்களில் கூட இன்று *Tower* இருக்கிறது. விவிலிய வழி நின்று நாம் பார்க்கும் போது உப்பரிகை என்று அழைக்கப்படும் கோபுரமானது பழைய ஏற்பாட்டிலும் நற்செய்திலும் பேசப்படும் முக்கியமான ஒன்றாக இருந்தது. பழைய ஏற்பாட்டில் பார்க்கும்போது பாபேல் கோபுரம் நம் கண் முன் வருகிறது. இந்த கோபுரத்தை மக்கள் தங்கள் பெயரை நிலை நிறுத்த கட்டியதால், ஆண்டவரின் திட்டத்திற்கு எதிராக கட்டியதால், இந்த கோபுரத்தை தொடர்ந்து கட்ட முடியாமல் சிதறுண்டு போயினர் (தொ.நூ.11:4). ஏனெனில் ஆண்டவரே வீட்டை கட்டவில்லையெனில் அதை கட்டுவோரின் உழைப்பு வீணாகும். ஆண்டவரே நகரை காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும் (தி.பா 127:1). மேலும், ஆண்டவரின் திருப்பெயர் உறுதியான கோட்டை (நீ.மொ 18:10). ஏனெனில் ஆண்டவரே நம் புகலிடம், எதிரியின் முன் வலிமையான கோட்டை (தி.பா 61:3) இப்படிப்பட்ட கடவுளின் திருநகர் சீயோன் கோட்டைகளால், காவல் மாடங்களால் நிரம்பியுள்ளது என திருப்பாடல் ஆசிரியர் (48:11) கூறுகிறார்.

புதிய ஏற்பாட்டில் “உங்களுள் யாராவது ஒருவர் கோபுரம் கட்ட விரும்பினால், முதலில் உட்கார்ந்து அதை கட்டி முடிக்க ஆகும் செலவு கனித்து, அதற்கான பொருள் வசதி நம்மிடம் இருக்கிறதா என பார்க்க மாட்டாரா? என லூக்:15:28 -இல் ஆண்டவர் இயேசு கோபுரத்தைப் பற்றி கூறுகிறார்.

நம் அன்னை மரியாவை எடுத்துக் கொண்டால் அவரும் தாவீது இராஜாவின் உப்பரிகையே *(Tower of David)* என்று அழைக்கப்பட்டு வாழ்த்த பெறுகிறார். இதை *‘Turris Davidica’* என்று இலத்தின் மொழியில் அழைக்கிறோம். இந்த வாழ்த்துக்கு பின்புலமாக இருப்பது இனிமைமிகு பாடல் 4:4 “தாவீதின் கொத்தளம் போல் அமைந்துள்ளது உன் கழுத்து, வரிவரியாய் ஆயிரம் கேடயங்கள் அங்கே தொங்குகின்றன, அவையெல்லாம் வீரர் தம் படைக்கலன்களே”. இங்கே இந்த பாடலில் வரும் கன்னிப்பெண் கன்னி மரியாவோடு ஒப்பீடு செய்யப்படுகிறார்.

பழைய ஏற்பாட்டில், தாவீது அரசன் தன் ஆட்சியில் முன்னேறி வருகின்ற எதிரி படையை முன்னதாக பார்த்து அதை முறியடிக்க உதவும் கோபுரத்தை கட்டினான். புதிய ஏற்பாட்டில், அதே தாவீதின் குலத்தில் பிறந்த தாழ்நிலை நிறை மரியாவை, இறைவன் ஒரு கோபுரமாக கட்டி எழுப்புகிறார். ஏனெனில் தம் மக்களை சாத்தானின் சோதனைகளில் இருந்து வெற்றிபெறச் செய்வதற்காக இந்த கோபுரத்தில் இருந்து தான் ஆண்டவர் பார்த்தார். அலகையை வென்று ஆன்மீக வெற்றி கொண்டார். அவனியை அவலத்திலிருந்து காத்தார்.

ஆகட்டும்



# இறையடியார்
## மரியா தெரேசா வெரோனேசி
## (1870-1950)



அருட் பணி. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

தெரேசா வெரோனேசி, செப்டம்பர் 28, 1870-ல் இத்தாலி நாட்டில் உள்ள போலோனியா நகரில் பிறந்தார். இவரின் பெற்றோர்கள் ஜோசப் வெரோனேசி மற்றும் கிளெமென்டினா ஸ்காரனி ஆவர். இவரின் குடும்பம் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருந்தது. நலம்பட்ட குடும்பமாக இருந்தாலும், செல்வந்தர்கள் அல்லர். மதிப்புமிக்க, உயர்ந்த பண்பாளர்களான அவர்களின் வளர்ப்பு, ஒரு இளம் பெண்ணை வளர்க்க ஏற்ற சூழலாக அமைந்தது. தெரேசா மிகவும் தனித்துவமான அறிவும், உத்வேகமும் மிக்கவராக விளங்கினார். தன்னைத் துறவியாகவும், ஆசிரியையாகவும் ஆக்கிக் கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தபோது, தன் பெற்றோர்களையும், குருவான தன் மாமாவையும் மிகவும் குழப்பத்தில் ஆழ்த்தினார். எனினும், அவர்கள் அவளுக்கு எதிராக இல்லை ஜூலை, 1887-ல், பூதிரியே ஊரில் அமைந்துள்ள “வியாகுல அன்னையின் சிறு சகோதரிகள்” துறவு மடத்தில் இணைந்தார். 1888-ல் துறவு உடை அணிந்த அவர், தனது கல்வியை முடித்து, தொடக்கப் பள்ளி ஆசிரியர் சான்றிதழையும் பெற்றார். அக்டோபர் 3, 1899-ல், 29 வயதில், மற்றொரு ஊரில் ஒரு புதிய மடத்தைத் திறப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டார் அதன் தலைவியாகவும் இருந்தார். இந்தப் புதிய மடத்தில் ஒரு குழந்தைக் காப்பகமும், ஒரு பள்ளியையும் தொடங்கினார். ஒரு முறை, விரைந்து ஓடிக் கொண்டிருந்த ஆற்றில் குதித்து, மூழ்கிக் கொண்டிருந்த ஒரு குழந்தையைக் காப்பாற்றினார். இதற்காக, உள்ளூர் அதிகாரிகள் அவருக்கு “நகரின் வீரப்பதக்கம்” வழங்கினர். இந்த நிகழ்வு நகரின் பதிவேடுகளில் எழுதப்பட்டுள்ளது. இத்தகைய தியாகப்பண்பு அவரின் இயல்புக்கே உரியதாகும். இந்த ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு கூடுதல் பொறுப்புகளோடு அனுப்பப்பட்டார். இறப்பு வரை, 41 ஆண்டுகள் இந்தச் பொறுப்புகளை செய்து இந்த மடத்திலேயே தங்கியிருந்தார். குழந்தைப் பள்ளியைத் தவிர, இளம் பெண்களுக்கு பயனுள்ள தொழில்களைக் கற்பிப்பதற்கான ஒரு பணியகத்தையும் நிறுவினார். இரண்டு உலகப் போர்களின் கொடூரங்களை அனுபவித்தார். அவரின் மலர்ந்த முகமும், வெல்லும் பண்பும், துன்பத்தில் ஆறுதல் பெறவும், குடும்பச் சிக்கல்களுக்கு ஆலோசனை கேட்கவும் வந்த ஆண்களிடையேயும் பெண்களிடையேயும் நம்பிக்கையை ஊட்டின. குழந்தைப் பள்ளியில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் தன் குடும்பத்தையும் சேர்த்தே வந்தது சகோதரி தெரேசாவின் இதயத்தில், அவை அனைத்தும் ஒரே குடும்பமாக மாறின. இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள், விடுப்பில் வீடு திரும்பும் போதெல்லாம், தங்கள் குடும்பத்தைச் சந்திப்பதற்கு முன்பாக அவரைச் சந்திக்க வந்தனர். அவர் அனைவரின் தாயாக இருந்தார்! போர் சேதம் காரணமாக மறைமாவட்ட குருத்துவக் கல்லூரி மூடப்பட்டு, இவர் இருந்த மடத்தில் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு கல்லூரி திறக்கப்பட்டது. அங்கு பயின்ற பதினான்கு குருத்துவ மாணவர்கள் குருக்களாக பிரமாணம் செய்யப்பட்டனர். அவரின் பிரார்த்தனைகளும், துன்பங்களும் பல மறைபரப்பு பலன்களைத் தந்தன! பெப்ரவரி 19, 2000-ல் அவரை புனிதரைக்கும் பணி தொடக்கப்பட்டு ஏப்ரல் 6, 2003-ல் முடிவுக்கு வந்தது. நவம்பர் 5, 2004-ல், இவரின் வீரசெயல்களும், மறைபரப்பு பணிக்கு செய்த முயற்சிகளும் வத்திகனால் உறுதி செய்யப்பட்டது. இப்போது அவரின் புனிதப் பண்புகள் குறித்த ஆவணம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.







இந்த ஆலயம், தலைகீழாக படுத்திருக்கும் யானைப் போன்றும், ஆலயத்தின் நான்கு கோபுரங்களும் யானையின் கால்களைப் போன்றும் அமைந்துள்ளன. இந்த நான்கு கோபுரங்களும் நான்கு தலையாய புண்ணியங்களை குறிப்பதாக அமைந்துள்ளன. அவையாவன: 1. விவேகம் 2. நீதி 3. துணிவு 4. பொறுமை.

லியோன் நகரம் திருஅவை வரலாற்றில் மிகமுக்கிய பங்கு வகித்த இடமாகும். இரண்டாம் நூற்றாண்டில் தப்பறைக் கொள்கைகளால் திருஅவை தவித்துக் கொண்டிருந்த போது, தனது ஞானம் நிறைந்த சொற்களாலும், எழுத்துக்களாலும் திருஅவையின் உண்மையான படிப்பினைகளை எடுத்தியம்பிய இரனேயுஸ் வழிநடத்திய திருஅவை லியோன் திருஅவை ஆகும். இந்நகரத்து பொக்கிசங்களுள் முக்கியமான இந்த ஆலயம் மக்களின் விசுவாசம் தளர்ந்திருந்த காலக்கட்டத்தில் அதை உறுதிப்படுத்தவும், வளரச் செய்யவும் உறுதுணையாக இருந்தது. நாம் வாழும் இந்நாட்களிலும் நம் விசுவாத்தை திடப்படுத்த இந்தகைய ஆலயங்கள் தேவை என்பதை உணருவோம். ஆலயச் சந்திப்புகளுக்கு நாம் மட்டுமன்றி நம் பிள்ளைகளையும் அழைத்துச் செல்வோம். திருவருகைக் காலத்தில் அன்னையோடு இணைந்து உலக மீட்பராம் இயேசுவின் பிறப்பு விழாவை சிறப்புடன் கொண்டாட தயார் செய்வோம்.

**திருப்பயணம் தொடரும்..........**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## திருப்பாடல்கள் 116-130



சகோ. எட்மன். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | | | | 1 |
| | 6 | | | | | | | 5 | |
| | | 10 | | | | | 9 | | |
| | | | 13 | | | | | | |
| | | | | X | X | X | | | |
| | | | | | | | 15 | | |
| | | | | | 14 | | | | |
| | | 11 | | | | | 12 | | |
| | 7 | | | | | | | 8 | |
| 3 | | | | | | | | | 4 |

**வலமிருந்து இடம்**

1. நான் இன்னலுற்ற வேளையில் ஆண்டவரை நோக்கி ________, அவரும் எனக்குச் செவிசாய்த்தார்.
4. உம் கைகளே என்னை உருவாக்கின; என்னை வடிவமைத்தன; உம் கட்டளைகளை நான் கற்றுக்கொள்ள எனக்கு மெய்யுணர்வு ________.
5. எளிய ________ ஆண்டவர் பாதுகாக்கின்றார்; நான் தாழ்த்தப்பட்டபோது எனக்கு மீட்பளித்தார்.
8. ஆண்டவரே! என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்; என் ______ குரலை உம்முடைய செவிகள் கவனத்துடன் கேட்கட்டும்.
9. ______ மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவர் சீயோனிலிருந்து உங்களுக்கு ஆசி வழங்குவாராக!
12. அவற்றால் தம் அம்பறாத்துணியை நிரப்பிய வீரர் _____ பெற்றோர். நீதி மன்றத்தில் எதிரிகளோடு வழக்காடும்போது, அவர் இகழ்ச்சியடையமாட்டார்.
14. ஆண்டவரின் கோவிலுள் நிற்பவர்களே! நம் கடவுளின் ____ முற்றங்களில் உள்ளவர்களே! ஆண்டவரைப் புகழுங்கள்! 135:2
15. துரோகம் செய்வோரை அருவருப்புடன் பார்க்கின்றேன்; ஏனெனில், அவர்கள் உம் எதைக் கடைப்பிடிப்பதில்லை?

**இடமிருந்து வலம்**

2. அது __________ மலைப்பனி சீயோனின் மலைகள்மேல் இறங்குவதற்கு ஒப்பாகும்; ஏனெனில், அங்கிருந்தே என்றுமுள வாழவென்னும் ஆசிதனை ஆண்டவர் பொழிந்தருள்வார்.





'விண்ணைக் கண்டேன் வியப்புக் கொண்டேன்,
மண்ணைக் கண்டேன் மதிப்புக் கொண்டேன்,
காற்றைக் கண்டேன் கற்றுக் கொண்டேன்,
நிலவைக் கண்டேன் நிம்மதி கொண்டேன்,
இறைவா நான் உன்னை கண்டேன், அதில் என்னை கொண்டேன்'

என்ற உணர்வோடு வாழும் வரத்தைக் கேட்டு இந்த திருப்பலியில் ஜெபிப்போம்.

*முதல் வாசக முன்னுரை: (எசா: 60:1-6)*

இன்றைய முதல் வாசகமானது இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. எழு, ஒளிவீசு, ஆண்டவரின் மாட்சி உன்மேல் வந்துவிட்டது. இஸ்ரயேலர்கள் மேல் இறைவன் வைத்த அன்பையும் அவர்கள் எதிர்கால வளர்ச்சியையும் குறிக்கிறது. இருளிலிருந்து ஒளிக்கும், துன்பத்திலிருந்து இன்பத்திற்கும், அழைத்துச்செல்லும் இவ்வாசகத்திற்கு மனம் தளராமல் செவிமடுப்போம்.

*இரண்டாம் வாசக முன்னுரை: (எபே: 3:2-3,5-6)*

இன்றைய இரண்டாம் வாசகம் புனித பவுல் எபேசியருக்கு எழுதிய நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. தூய ஆவியாரின் மூலம் அனைத்து வேறுபாடுகளையும் நீக்கி கிறிஸ்துவுக்குள் அனைவரும் சமம் என்று உறுதிபடுத்தும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் மூன்று கீழ்த்திசை ஞானிகளுக்கு வழிகாட்டிய விண்மீனைப்போல ஒருவர் ஒருவருக்கு வழிகாட்டிகளாக இருந்து ஒளியின், உண்மையின் மக்களாக வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா! மூன்று ஞானிகள் வெறும் பரிசுப் பொருட்கள் மட்டுமல்ல, தங்களையே முழுமையாக உமக்கு அர்ப்பணித்தது போல, நாங்களும் எங்கள் சொல், செயல், உடல், ஆவி அனைத்தையும் உமக்கு அர்ப்பணித்து வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா! விண்மீன் மறைந்தவுடன் ஞானிகள் கடவுளையும் தங்களையும் சபித்துவிட்டு வீடு திரும்பவில்லை. மாறாக மற்றவர்களது வழியைத் தேடினர். நாங்களும் எங்களது வாழ்வுப் பயணத்தில் தொடர் துன்பங்கள் மற்றும் வேதனைகள் வரும்போது எங்களைவிட ஆன்மீகத்தில் ஆழம் கண்டவர்களின் உதவியை நாடி விசுவாசப் பயணத்தில் எம் இலட்சியத்தை அடைய துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா! புனித பவுலை போல நாங்களும் கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு சாட்சியம் பகிரவும், எல்லோரும் இறைவனால் மீட்கப் பெற வேண்டுமென்ற உயரிய நோக்கில் வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மன்றாட்டுகள்**

1. உமது ஆசீர்வாதத்தை நாளும் பொழிகின்ற அன்பு இறைவா! எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவரத்தார் அனைவரும் உமது அன்பின் பாதையில் வழி நடந்து, ஒப்படைக்கப்பட்ட மக்களை திருக்குடும்பத்தின் சாயலில் வழிகாட்ட உமது அருளை தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா! உலகத்தில் உள்ள எல்லா கிறிஸ்தவ குடும்பங்களை உமது கரத்தில் தருகின்றோம். இவர்களை ஆசீர்வதியும். குடும்பங்களில் நடக்கக்கூடிய பிரச்சனைகளை களைந்து, அன்போடும், இரக்கத்தோடும், ஒற்றுமையோடும் திருக்குடும்பம் போல திகழ உமது ஆசிரை தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. எல்லாம் வல்ல அன்பு தந்தையே இறவைா! குடும்பங்களில் கணவர் குடித்துவிட்டு வருவதால் அமைதி இல்லாமல், நிம்மதி இழந்து தவிக்கின்ற குடும்பங்களுக்கு நீரே தலைவராக இருந்து, அமைதியையும், நிம்மதியையும், கொடுத்து வழி நடத்த வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. ஞானத்தின் ஊற்றான இறவைா! நாங்கள் அனைவரும் நீர் கொடுத்த இந்த வாழ்வுக்காய் நன்றிக்கூறி, உடன்வாழும் அனைவரோடும் நல் உறவுடன் வாழ, வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## *திருக்காட்சி பெருவிழா*
## *(04.01.2026)*

அன்பிற்கினியவர்களே! இன்று நாம், தாய் திருஅவையோடு திருக்காட்சி பெருவிழாவை கொண்டாடி மகிழ்கிறோம். திருக்காட்சி பெருவிழா இறைவன் தன்னை அனைத்து மக்களுக்கும் வெளிப்படுத்திய பெருவிழா என கொண்டாடப்படுகிறது. இறைவன் அனைத்து மக்களுக்கும் பொதுவானவர் என்பதை உலகிற்கு உணர்த்தும் விழா இது. கீழை நாடுகளில் இருந்து வந்த பிற இனத்து மூன்று ஞானிகள் முதலில் யூதர்களின் அரசனை காண தேடி வந்தார்கள். தடைகள் பல இருந்தாலும் தளராமல் உன்னத குறிக்கோளை அடைந்து பல்வேறு சவால்களை சந்தித்து, குழந்தை இயேசுவை பார்த்த பொழுது அவர்களுடைய கஷ்டமெல்லாம் காணாமல் போனது, அங்கு இறைவனை கண்டு தென்றலிட்டு வணங்கி ஆராதித்தனர். பிறஇனத்தார் நற்செய்தியின் வழியாக இயேசுவின் உடன் பங்காளிகள் ஆகின்றனர் என்கிறார் புனித பவுல். பிறஇனத்தார் உன் ஒளியை நோக்கி வருவார்கள் என்கிறார் இறைவாக்கினர் ஏசாயா. உண்மையான தாகத்துடன் தன்னை தேடும் அனைவருக்கும் தன்னை வெளிப்படுத்தும் இறைவன் நம் இறைவன். அவர் அனைத்து மக்களுக்கும் பொதுவானவர், யாருக்கும் தனிப்பட்ட வகையில் அவர் சொத்தாக முடியாது. உண்மையில் பார்க்க போனால் இந்த உலகமே அவரது சொத்து. நாமும் நம் ஆண்டவர் உண்டாக்கிய இந்த அழகிய பூமியில் ஆண்டவரை ஆர்வமாய் தேட முயல்வோம். அனைவருக்கும் திருக்காட்சி பெருவிழா நல்வாழ்த்துக்கள்.





3. அப்பொழுது, நமது முகத்தில் மகிழ்ச்சி காணப்பட்டது. நாவில் எழுந்தது; “ஆண்டவர் அவர்களுக்கு மாபெரும் செயல் புரிந்தார்” என்று பிற இனத்தார் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.
6. ஆண்டவரே! தென்னாட்டின் வறண்ட ஓடையை எதுவாக வான்மழை மாற்றுவதுபோல, எங்கள் அடிமை நிலையை மாற்றியருளும்?
7. அவர் பூவுலகின் எந்த எல்லைகளிலிருந்து மேகங்களை எழச்செய்கின்றார்? மழை பெய்யும்படி மின்னலை உண்டாக்குகின்றார். காற்றைத் தம் கிடங்குகளிலிருந்து வெளிவரச் செய்கின்றார்.
11. உம் ஒழுங்குமுறைகளை நான் கடைப்பிடித்து வருகின்றேன்; நான் அவற்றின் மீது என்னக்கொண்டுள்ளேன்?
13. ஆண்டவரே! நான் உண்மையாகவே உம் ஊழியன்; நான் உம் ______; உம் அடியாளின் மகன்; என் கட்டுகளை நீர் அவிழ்த்துவிட்டீர்.
14. எவ்வழி நோக்கித் திரும்புவோரை ஆண்டவர் தீயவரோடு சேர்த்து இழுத்துச் செல்வார்? இஸ்ரயேலுக்கு நலம் உண்டாவதாக!

**மேலிருந்து கீழ்**

1. பிள்ளைகள், ஆண்டவர் அருளும் செல்வம்; எது ஆண்டவர் அளிக்கும் பரிசில்?
2. ‘__________ உள்ளது அவரது பேரன்பு’ என இஸ்ரயேல் மக்கள் சாற்றுவார்களாக!
5. நீரோ ________ அளிப்பவர்; மனிதரும் உமக்கு அஞ்சி நடப்பர்.
6. ஆண்டவர் தம் மக்களை __________ தீர்ப்பிடுவார்; தம் அடியாருக்கு இரக்கம் காட்டுவார்.
10. அப்பொழுது, நமது முகத்தில் மகிழ்ச்சி காணப்பட்டது. நாவில் களிப்பாரவாரம் எழுந்தது; “ஆண்டவர் அவர்களுக்கு மாபெரும் ___ புரிந்தார்” என்று பிற இனத்தார் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.
13. பிள்ளைகள், ஆண்டவர் அருளும் செல்வம்; மக்கட்பேறு, அவர் அளிக்கும் .

**கீழிருந்து மேல்**

3. உம் இல்லத்தில் உம் துனைவியார் ________ திராட்சைக் கொடிபோல் இருப்பார்; உண்ணும் இடத்தில் உம் பிள்ளைகள் ஒலிவக் கன்றுகளைப் போல் உம்மைச் சூழ்ந்திருப்பர்.
4. இங்கே ______ மரபிலிருந்து ஒரு வல்லவனை எழச் செய்வேன்; நான் திருப்பொழிவு செய்தவனுக்காக ஒரு ஒளிவிளக்கை ஏற்பாடு செய்துள்ளேன்.
7. வேடர் கண்ணியினின்று தப்பிப் பிழைத்த பறவைபோல் ஆனோம்; அறுந்தது; நாம் தப்பிப் பிழைத்தோம்.
8. எருசலேமில் சமாதானம் நிலைத்திருக்கும்படி வேண்டிக்கொள்ளுங்கள்; “உன்னை _____வோர் வளமுடன் வாழ்வார்களாக!
11. ______ கதிரவன் உம்மைத் தாக்காது; இரவில் நிலாவும் உம்மைத் தீண்டாது.
12. உன் கோட்டைகளுக்குள் அமைதி நிலவுவதாக! உன் மாளிகைகளில் எது இருப்பதாக!?

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-12-2025**

# மீட்புப் பயணம்

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி



## காயின் - ஆபேல

கடவுள் வடித்த முதலாம் மாந்தர் - இன்ப
வனத்தை முறித்த சபல மாந்தர்
இவர்கள் பெற்ற புதல்வர் இருவர்
காயின் - ஆபேல் பெயர்தான் அவர்கள்

வேளாண் தொழிலை காயின் தெரிந்தான்
வேண்டிய அளவினும் இலாபம் நிறைந்தான் - ஆடுகள்
மேய்ப்புப் பணியை ஆபேல் தெரிந்தான்
மெச்சும் படியே சாதகம் புரிந்தான்

செழிப்பாய் வளர்த்த வனப்புக் கிடாவை
காணிக்கைப் பொருளாய் ஆபேல் படைத்தான் -கடவுள்
ஆசீர் நல்கி ஏற்றுக் கொண்டார் -மேலும்
பலுகிப் பெருக்கிட ஊக்கம் தந்தார்

தூசும் பதிரும் கலந்த விளைவை
மாசு மனதாற் காயின் படைத்தான்
கடவுள் அதனை ஏற்றிட மறுத்தார்
ஆபேல் மனம்போல் மாறிட உரைத்தார்

ஆபேல்மீது காயின் கோபம் கொண்டான்
ஆண்டவர் செயலால் தீரம் கொண்டான்
செய்தப் பிழையை ஏற்றிட மறுத்தான்
ஆபேல் தலையைக் கொய்திட துடித்தான்

அன்புத் தம்பியே வாவா என்றான் -வயலில்
இன்பம் களித்திட போகலாம் என்றான்
அண்ணன் சொற்படி தம்பி சென்றான் -வீண்
எண்ணம் கொள்ளாது நம்பிச் சென்றான்

நம்பி வந்தவனைக் கட்டிப் போட்டான் -தனியே
தம்பித் தலையை வெட்டிப் போட்டான்
கொலைக் குற்றத்தினை முதன்முதலாய் புரிந்து -பாவ
விலைப் பேற்றினை தனதாய்ப் பதிந்தான்

கடவுள் அவன்மேல் வெகுண்டு எழுந்தார்
தலைமுறை மேல்கொடுஞ் சினமே பொழிந்தார் -இவ்வாறு
தவறுக்குமேல் தவறு மனிதன் புரிந்தான் -ஆனால்
தவறினோர் திருந்த இறைவன் கனிந்தார்





வாழ்வில் மிக முக்கியமான ஒன்றாக இருப்பது குடும்ப வாழ்வு. அனைத்து நன்மைகளும் குடும்பங்களில் தான் ஊற்றெடுக்கிறது. குடும்ப வாழ்வு இல்லை என்றால் மனித குலமே இல்லை. எனவே தான் குடும்பத்தை ஒரு குட்டி திருஅவை என்று அழைக்கின்றோம். இறை நம்பிக்கையின் மகிழ்வை எந்த ஒரு குடும்பம் பிறருக்கு வழங்குகிறதோ, அந்தக் குடும்பம் பூமிக்கு உப்பாக இருக்கும். பெற்றோரை மேன்மைபடுத்துபவர்கள் தங்கள் பாவங்களுக்கு பரிகாரம் தேடுகிறார்கள் என்றும், தாயை மதிக்கும் போது செல்வத்தை சேமிக்கிறார்கள், என்றும் முதல் வாசகம் கூறுகிறது. ஞானத்தோடு ஒருவருக்கு ஒருவர் அறிவுரை கூறவும், கடவுளை போற்றவும், நன்றி சொல்லவும், மனைவி கணவனுக்கு பணிந்திருக்கவும், கணவன் மனைவியை அன்பு செய்யவும், பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்பணிந்து நடக்கவும் ஒரு குடும்பம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று இரண்டாம் வாசகமும் நமக்கு அறிவுரை கூறுகிறது. மத்தேயு நற்செய்தியாளர், குழந்தை இயேசுவை பாதுகாத்து யோசேப்பு கடவுளின் வழிநடத்தலை முழுமையாக செயல்படுத்தினார் என்று பெருமை பொங்க கூறுகிறார். நீதிமானாகிய யோசேப்பு கனவின் மூலம் இறை திட்டத்தை பெற்றுக் கொண்டார். யோசேப்பு காணும் கனவு சாதாரண கனவு அல்ல, கண் விழித்துப் பார்க்கும்போது மறைந்து போகும் கனவும் அல்ல. மாறாக ஆண்டவருடைய திட்டம் வெளிப்படுத்தப்படுகின்ற ஒரு மாபெரும் கனவாக நாம் பார்க்கிறோம். ஓசையா 2:15, எரேமியா 2:17, மத்தேயு 2:23, மற்றும் ஏராளமான இறைவாக்கினர்களுடைய இறை வார்த்தைகள் இங்கு நிறைவேறுவதை மத்தேயு நற்செய்தியாளர் படம் பிடித்து காட்டுகின்றார். ஓசையா இறைவாக்கினர் 11:1 இல் ‘எகிப்திலிருந்து என் மகனை அழைத்து வந்தேன்’ என்று சொன்ன முன்அறிவிக்கப்பட்ட நிகழ்வும் இங்கு நிறைவேறுவதாக நாம் பார்க்கிறோம். திருக்குடும்பத்தின் துணிவும், ஒற்றுமையும், லட்சியமும் நம் குடும்பங்களில் அடிப்படையாகவும் ஆன்மிகமாகவும் மாற வேண்டும். எனவே திருகுடும்பத்தின் சாயலாக மாற, இறைவனின் அருளை நாடி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை: (சீரா: 3:2-7,12-14)**

இன்றைய முதல் வாசகம் பெற்றோருக்கு செலுத்தகூடிய கடமைகளை எடுத்துக்கூறுகிறது. தந்தையரை மதிக்கவும், அன்னையரை மேன்மைப்படுத்தவும், பெற்றோர்களுக்கு உதவிகரமாக இருந்து அவர்களைப் போற்றும்படி நமக்கு அறிவுரை புகட்டும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: (கொலோ: 3:12-21)**

இன்றைய இரண்டாம் வாசகமானது கடவுளால் தெரிந்து கொள்ள பட்டவர்கள் மிகுந்த கனி தரும் பண்புகளால் அணிசெய்யவேண்டும், மேலும் கணவன், மனைவி, பிள்ளைகள் என்று நல்ல குடும்பமாய் ஒருவர் ஒருவரை ஏற்றுக்கொண்டு மன்னித்து அன்பு செய்து வாழ வேண்டும் என்று கூறுகின்றார். மேலும் ஆவிக்குரிய பாடல்களை பாடி நன்றியோடு கடவுளை போற்றுங்கள் எனும் நல்ல அறிவுரைகளின் படி வழிநடத்தும் இறைவார்த்தைகளுக்கு செவிமடுப்போம்.

3. எங்களை மீட்கின்ற அன்பு தெய்வமே! உமது வருகையை எதிர்நோக்கி காத்துக் கொண்டிருக்கும் நாங்கள் பொறுமையோடும், உறுதியோடும், துணிச்சலோடும் எதிர்கொண்டு வாழவும், இறைமதிப்பீடுகள் எங்கள் இல்லங்களிலும் உறவுகளிலும் வெளிப்படவும் உமது ஆசிரை தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. நீதியின் அரசராகிய ஆண்டவரை! இச்சமுதாயத்தின் தூண்களான இளையோர் சமூக ஊடகங்களிளும், நுகர்வு கலாச்சாரத்திலும் தொலைந்து போகாமல் கிறிஸ்தவ மதிப்பீடுகளின் வழியில் வாழ தேவையான வரங்களை தந்து காத்திட வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

*கிறிஸ்து பிறப்பு பெருவிழா*

வெள்ளி நட்சத்திரமும், பசுமையான கிறிஸ்மஸ் மரமும், குடிலின் குதூகலமான ஜொலிப்பும், வான தூதர்களின் வரவேற்பும், மேகங்களின் தாளமும், சோலைகளின் நெகிழ்ச்சியும், அனைவரின் எதிர்பார்ப்பும், மகிழ்ச்சியான மனநிலையும் இயேசு பாலனுக்காய் காத்திருக்கிறது. அகில உலகமே அகமகிழ்ந்து கொண்டாடும் நாள் இந்நாள். இயற்கையும் மனிதனும் இணைந்து போற்றி புகழக்கூடிய பொன்நாள். அனைவரின் கவலைகளையும் மறந்து களிப்படைய வேண்டிய திருநாள். அனைவருடைய நம்பிக்கையின் மறு பிறப்பாகும் மகிழ்ச்சி நாள். கிறிஸ்து மனிதராய் மண்ணில் தோன்றிய இந்நாள், விரும்பும் ஒரு செயலை இவ்வுலகில் செயல்படுத்த கடவுளால் வழங்கப்பட்ட ஒரு வாய்ப்பு. அந்த வாய்ப்பை முறையாக பயன்படுத்தினால் கடவுளின் மனதிற்கு நெருக்கமான நபர்களாகலாம். கடவுளின் நோக்கத்தை அறிவின் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் செயல்படுத்த ஒரு மீட்பர் கிடைத்த நாள். சுயநலத்துக்காக பணி செய்யும் அரசியல்வாதிகள் நடுவில் பொதுநல மன்னராய் அனைவர் முன்னிலையிலும் உயர்த்தரமான வைரம் கிடைத்த நாள். ஏழைகளை துச்சம் என மதித்து பாவிகளை ஒதுக்கி வைத்து வாழும் மாந்தர்கள் நடுவில், ஏழைகளை நேசித்து பாவிகளை நண்பர்களாக்கிய மாணிக்க விளக்கு நமக்கு கிடைத்த நாள். பணத்தால் அனைத்தையும் வெல்லலாம் என்று நினைக்கும் செல்வர்கள் நடுவில் அன்பால் அனைவரையும் வெல்லலாம் என வாழ்ந்த அன்பு நாயகன் நமக்கு கிடைத்த நாள். அதிகாரத்தோடு ஆளும் ஆட்சியாளர்கள் நடுவில் பாசத்தோடு ஆட்சி செய்த பாச செம்மல் நமக்கு கிடைத்த நாள். மனிதத் தன்மை அனைத்தையும் 33 ஆண்டுகளில் நமக்கு கற்றுத் தந்த பாலகனை மனதில் ஏந்தி மகிழ்ச்சி தர இன்று மட்டும் நம் மனங்களில் இருந்து விடாமல் மனித தன்மையை அனைவருக்கும் கற்றுக் கொடுத்த பாலனை என்றும் முழு மனதோடு ஏற்கும் மக்களாக இணைவோம் இப்பெருவிழா பலியில்.

*திருக்குடும்ப விழா*

*28.12.2025*

அன்புக்குரியவர்களே! இன்று நாம் திருக்குடும்ப விழாவை சிறப்பிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். ஒரு குடும்பம் எவ்வாறு இருக்க வேண்டும்? என்று இன்றைய வாசகங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. மனித





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஜான் பால் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்



*திருவருகைக்காலம் மூன்றாம் ஞாயிறு*

*(14.12.2025)*

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே! இன்று நாம் திருவருகைக்கால மூன்றாம் ஞாயிறை கொண்டாடுகின்றோம். முதல் வாசகம், கடவுள் நமக்கு மகிழ்ச்சியை தருவார், விடுதலையை தருவார் என்று கூறுகிறது. எசாயாவின் இறைவாக்குகள் எல்லாம் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறுவதை நாம் பார்க்கிறோம். கிறிஸ்தவ வாழ்வில் கிறிஸ்துவோடு இணைந்தால் 'மகிழ்ச்சியும் மன நிறைவும்' நம் உள்ளத்தில் நிறைவாக இருக்கிறது. எந்த ஒரு வலியாலும், எந்த ஒரு வேதனையாலும் எந்த ஒரு வெளிப்புற பொருட்களாலும் அந்த மகிழ்ச்சியை எடுக்க முடியாது. இரண்டாம் வாசகத்தில் யாக்கோபு சில எடுத்துக்காட்டுகளை கூறி ஆண்டவர் வரும்வரை பொறுமையோடு காத்திருக்க சொல்கிறார். ஆண்டவர் மீது உள்ள விசுவாசம் இந்த உலகில் நமக்கு நேரிடும் தீமைகள் மத்தியில் நமக்குள்ளாக பொறுமையை விளையச் செய்கிறது. பழைய ஏற்பாட்டில் உள்ள இறைவாக்கினர்கள் தாங்கள் உரைத்த இறைவார்த்தைகளை தங்களுடைய வாழ்நாளில் நிறைவேறுவதை காணாவிட்டாலும் அவை நிச்சயமாக நடைபெறும், என்று ஆண்டவரை நம்பி பொறுமையோடு தங்களுடைய ஓட்டத்தை அவர்கள் முடித்தார்கள். திருமுழுக்கு யோவான் மிகவும் தெளிவாக இயேசுவை பற்றி தெரிந்து அடையாளம் கண்ட பிறகு முழு போதனையிலேயே ஈடுபட்டார். அவரைப் போல நாமும் இயேசு கிறிஸ்துவின் அனுபவத்தை பெற வேண்டும். அவர் நம்மில் இருந்தால் தான் அவரை பிறருக்கு கொடுக்க முடியும். திருமுழுக்கு யோவான் 'நான் மெசியா அல்ல' என்று கூறுகின்றார். அந்த திருமுழுக்கு யோவானை தான் இறைவாக்கினரை விட மேலானவர் என்றும் மனிதராய் பிறந்தவர்களில் மிகப்பெரியவர் என்றும் புகழ் மாலை சூட்டுகிறார் இயேசு. நாமும் தற்பெருமை நாடாமல் ஆண்டவரை எதிர்நோக்கி அவரையே எப்போதும் முன்னிலைப்படுத்த இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை:** (எசா: 35:1-6,10)

இன்றைய முதல் வாசகமானது இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஆண்டவரால் விடுவிக்கப்பட்டோர் திரும்பி வருவர். அவர்களின் துன்பம் மறைந்து அற்புதங்கள் நிகழும் என்ற கூற்றை உண்மையாக்கும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: (யாக்: 5:7-10)**
ஆண்டவரின் வருகைக்காக நீங்கள் பொறுமையுடன் காத்திருங்கள். பயிரிடும் விவசாயி நல்ல விளைச்சலை எதிர்பார்த்து காத்திருப்பது போல உங்கள் இருதயங்களை உறுதிப்படுத்துங்கள், ஆண்டவருக்காக காத்திருங்கள். ஏனெனில், ஆண்டவர் மிகுந்த கனிவும் இரக்கமும் உள்ளவர். வலிமையுடையவரை விட பொறுமை உடையவர், மேலானவர் எனக் கூறும் இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**
1. அன்பின் பரலோக பிதாவே! எம் திருஅவைத் தலைவர்கள் அனைவரும் உமது அடிச்சுவடுகளை தன்வயமாக்கிடவும், மக்களின் தேவையை அறிந்து செயல்படவும், தேவையான அருள் வரங்களை தந்து காத்திட வேண்டும்மென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அமைதியின் தெய்வமே இறைவா! என் நாட்டுத் தலைவர்கள் அனைவரும் போட்டி, பொறாமை, சுயநலம் அகன்றி மக்கள் நலனில் அக்கறை கொண்டு, நல்ல தலைவர்களாக வாழ்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. வழிநடத்தும் அன்பு தெய்வமே இறைவா! திருவருகைக்காலம் மூன்றாம் வாரத்தில் இருக்கின்றன அனைவரும் உண்மையான மனமாற்றம் பெற்று புனிதமான வாழ்வு வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. எல்லாம் வல்ல அன்பு தந்தையே! திருவருகைக்காலத்தில் நாம் அனைவரும் உடல் உள்ளம் ஆன்மா அனைத்தையும் தூய்மைப்படுத்தி, நமது உள்ளத்தில் இயேசு பாலன் பிறக்க நம்மையே தயார் செய்து பக்குவப்படுத்தி வாழ உமது அருளை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## *திருவருகைக்காலம் நான்காம் ஞாயிறு (21.12.2025)*

அன்பார்ந்த இறை மக்களே! இன்று திருவருகைக்கால நான்காம் ஞாயிறை சிறப்பிக்கும் நமக்கு திருஅவையானது இயேசு கிறிஸ்துவின் பிறப்பை மையக்கருவாக தந்துள்ளது. முதல் வாசகத்தில், இறைவாக்கினர் எசாயா, ஆகாசு அரசனிடம் 'கடவுளிடமிருந்து வாக்குறுதியை உறுதிப்படுத்த ஒரு அடையாளத்தை கேட்கும்படி' கூறினார். ஆகாசு மறுத்து விடவே எசாயா கடவுளிடமிருந்து ஒரு அடையாளத்தை கொடுத்தார். இயேசு கிறிஸ்துவின் வருகை முன்குறிக்கப்பட்டதாகவே இருந்தது. ஆண்டவர் தாவீதின் வம்சாவளியில் உண்மையாக இருப்பார் என்பதற்கான வாக்குறுதி இது. யூதாவிற்கு ஒரு எதிர்காலம் இருக்கும், அந்த எதிர்காலம் இம்மானுவேல் மூலம் நிறுவப்படும் என்று கூறுகிறது. இரண்டாம் வாசகத்தில் தூய பவுல் கூறுகையில் 'பிற இனத்தார் அனைவரும் இயேசுவின் மீது நம்பிக்கை கொண்டு கீழ்ப்படிந்து, இயேசுவின் பெயர் விளங்க, அவர் வழியாகவே அவர்கள் திருத்தூதுப் பணி செய்வதற்குரிய அருளைப் பெற்றுக் கொண்டார்கள்' என்று சொல்கிறார். நற்செய்தியில் கடவுள் தம் தூதர் வழி அறிவித்த இறை திட்டத்தை யோசேப்பு கடமை உணர்வோடு ஏற்று குழந்தை இயேசுவின் காவலரானார். இறைத்தூதருக்கு யோசேப்பு செவிசாய்த்ததால், பிறந்த குழந்தைக்கு இமானுவேல் என்ற பெயரிடும் உரிமை பெற்றார். பெண்ணின் பெருமையை போற்றி மரியாவை மனைவியாக ஏற்ற மனப்பாங்கிலும், இயேசு பாலனை ஏரோது அரசனின் சதித்திட்டதிலிருந்து காக்க, மறைந்து திரிந்த நாட்கள் ஏற்படுத்திய வேதனை சோதனைகளிலும், அவரின் மனிதநேய பண்பு மிளிர்கிறது. ஒரு குடும்பத்தின் பெருமைக்குரிய தந்தையாக விளங்கிய அவரது நேர்மை போற்றுதற்குரியதாக அமைகிறது. கடவுளின் திட்டத்தை செயல்படுத்த கொடுக்கப்பட்ட அழைப்பை கண்ணியம், கடமை உணர்வுடன் செயல்படுத்திய அவரின் தியாகமும் போற்றுதற்குரியது. இறைவாக்குமூலம் முன்அறிவிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பல ஆண்டுகள் கழித்து நிறைவேறியிருந்தாலும், இப்போது இயேசுவின் பிறப்பை நம் இதயக் குடிலில் வரவேற்க இத்திருப்பலியில் நம்மையே ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.

**முதல் வாசக முன்னுரை: (எசா: 7:10-14)**
இன்றைய முதல் வாசகமானது இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. கடவுளாகிய ஆண்டவரிடம் ஓர் அருட்அடையாளத்தை கேட்க ஆகாசிடம் இறைவாக்கினர் கூற அவர் மறுக்கிறார். இறைவாக்கினர் எசாயா ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தை காட்டுவார், கருவுற்றிருக்கும் கன்னி ஓர் ஆண்மகனை பெற்றெடுப்பார், அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார் என்று கூறும் ஏசாயாவின் வார்த்தைகளை கவனமுடன் கேட்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: (உரோ:1:1-7)**
இன்றைய இரண்டாம் வாசகம் புனித பவுல் உரோமையருக்கு எழுதிய நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்த்தெழுதல் உலகிற்கு மீட்பு வழங்கவே என இறைவாக்கினர்கள் மூலம் கடவுள் அறிவித்தார். தன் மகனை உலகிற்கு மனிதனாக அனுப்பி, தூய ஆவியின் துணையால் உலகினை திடப்படுத்தி, இயேசுவின் மீது நம்பிக்கை கொண்டு வாழ்ந்தால் மட்டும்தான் இயேசுவின் பணியை நாமும் தொடர முடியும் எனறு உணர்த்துகிறது அவ்வாசகம். இயேசுவின் மீட்பு பணியில் நாமும் உடன் உழைப்பாளர்களாக வர வேண்டி இவ்வாசகத்திற்கு செவி கொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்:**
1. நானே உங்களை தேர்ந்து கொண்டேன் என்று கூறிய ஆண்டவரே! திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவரத்தார், இல்லறத்தார், அனைவரையும் உமது தூய ஆவியினால் தூய்மையாக்கி காத்திட வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. எம்மோடு வாழ்கின்ற ஆண்டவரே! என் நாட்டுத் தலைவர்கள் அனைவரும் மக்கள் நலனில் அக்கறை கொண்டு வாழவும், மக்கள் என்ற சொத்தை பேணி காக்கவும், தேவையான ஞானத்தையும் விவேகத்தையும் தந்து காத்திட வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.